
குருவாயூரப்பன் கோவில்

உற்பத்தியும் மகிமையும்



குருவாயூரப்பன் கோயில் உற்பத்தியும் மகிமையும்

★

ஆசிரியர்:
டி. ஜி. மேனோன்.

★

மொழிபெயர்ப்பு:
வி. ஆர். சர்மா.

★

★

பிரசுரிப்பவர்:
சாந்தா புக் ஸ்டாள்,
மேற்கே நடை :: குருவாயூர்.

1961] [விலை ந. ப. 50

"குருவாயூரப்பன் கோயில் உற்பத்தியும் மகிமையும்."

உலகப்பிரசித்தமான குருவாயூரென்னும் புண்ணிய க்ஷேத்திரத்தின் மகிமையை புராதன நூல்களிலிருந்தும் முன்னோர் சொற்களிலிருந்தும் பலர் பலவாறாக புகழ்ந்திருக்கிறார்கள். என்றாலும் பரந்தாமனான கிருஷ்ணபரமாத்மாவின் மகிமையும், அவர் எழுந்தருளியிருக்கும் க்ஷேத்திரத்தின் மகிமையும் எவ்வளவு புகழ்ந்தாலும் அவை ஒரு பொழுதும் மிகையாகா. இந்த உறுதியை மேற்கொண்டு என் சிற்றறிவிற்கு இசைந்தபடி இப்புனிதக்ஷேத்திரத்தின் மேன்மைகளையும், இங்கே எழுந்தருளி பக்தர்களை கடாக்ஷித்து இரட்சிக்கும் கிருஷ்ண பரமாத்மாவை பஜிக்கவேண்டிய முறைகளையும் விவரிக்க முயற்சிக்கிறேன். இம்மயற்சிக்கு குருவாயூரப்பன் துணை புரிவாராக.

பல ஆண்டுகளுக்கு முன் துவாபரயுகத்தின் கடைசியில் பாண்டவவீரனான அர்ஜுனனுடைய பேரனான பரீட்சித்துமகாராஜா ஒரு முனிபுத்திரனின் சாபத்தால் தட்சகன் என்கிற ஸர்ப்பத்தின் விஷம்தீண்டி மாண்டாரன்றோ. அப்பொழுது பரீட்சித்தின் புத்திரனான ஜனமேஜயன் சிறு பாலகனாக இருந்தான். யௌவனமடைந்ததும் தகப்பனாருடைய மரணகாரணம் இன்னதென்று தெரிந்துகொண்டு தட்சகனிடம் கோபங்கொண்டார். அப்பகை தீர்ப்பதற்காக அதிகோரமான ஸர்ப்பயாகம் செய்யலானார். அந்த

யாகாக்னியில் உலகிலுள்ள அனேகாயிரம் ஸர்ப்பங்கள் சாம்பலாயின. அப்பொழுது தட்சகன் தங்கையான ஜரத்காரு என்னும் நாககன்னியில் ஜரத்காரு என்னும் ஓர் முனிவருக்குப்பிறந்த ஆஸ்திகமாமுனி ஸர்ப்பயாகத்தை நிறுத்தச்செய்து மீதியிருந்த ஸர்ப்பங்களை காப்பாற்றினார். ஆனால் ஸர்ப்பங்களைக்கொன்ற பாபத்தின் கொடுமையால் ஜனமேஜயமகாராஜனுக்கு குஷ்டமெனும் மகாவியாதி உண்டாயிற்று. எத்தனையோ ராஜவைத்தியம் செய்தும் பயன்படாமல் மகாராஜா வருந்திக்கொண்டிருக்கும்பொழுது தாபஸோத்தமரும் மகாவிஷ்ணுவின் கலைவாய்ந்தவரும் அத்திரிமகரிஷியின் புதல்வருமான தத்தாத்திரேய மகாமுனி அங்கு எழுந்தருளினார். அவரை விதிவழுவாமல் உபசரித்து வந்தனம் செய்து அவரிடம் தன் துன்பங்களை ஜனமேஜயமகாராஜன் தெரிவித்தபொழுது முனிவர் தியானத்திலமர்ந்து இதற்குச்செய்யவேண்டிய பரிகாரத்தை தெரிந்துகொண்டு இவ்வாற உரைக்க லானார்.

"ஓ மகாராஜனே! கேளும். இந்தக்கொடிய வியாதி தீர ஓர் வழியிருக்கிறது. அது யாதெனில் இந்த பாரத கண்டத்தின் தென்பகுதியில் பரசுராமரால் உண்டுபண்ணப்பட்ட கேரளமென்னும் தேசத்தில் குருவாயூர் என்றொரு புண்ணியக்ஷேத்திரமிருக்கிறது. அங்கு எழுந்தருளியிருக்கும் பகவான் ஸத்துவகுணபரிபூரணரும் எல்லா சராசரங்களிலும் வியாபித்திருப்பவரும், ஸச்சிதானந்தமூர்த்தியுமான

மகாவிஷ்ணுவாவர். அந்த குருவாயூரப்பனை பக்திமிகுந்த ஜனங்கள், மகாவிஷ்ணுவினுடைய பூர்ணாவதாரமான கிருஷ்ணமூர்த்தியாக உபாசனை செய்து வருகிறார்கள். அவரை நீர் பக்தியுடன் கொஞ்சகாலம் பஜிப்பீரானால் இந்த கொடும்வியாதி உம்மை விட்டகலும். ஸம்ஸாரஸாகரத்திலிருந்து முக்தியும் கிடைக்கும். க்ஷேத்திரோற்பத்தியை அடிப்படையாகக்கொண்டு அந்த பரமபாவனமான புண்ணியபூமியை குருவாயூர் என்று அழைத்துவருகிறார்கள். இருந்தபோதிலும் அவ்விடத்தை பூலோகவைகுண்டம் என்றுதான் சொல்லவேண்டும். மிகுந்த பக்தியுடையோர் அந்த வைகுண்டநாதனை சிரத்தையுடன் அடிபணிந்து ஆனந்தாமிருதம் அருந்தி மெய்மறந்து தியானம் செய்து வருகிறார்கள். மனிதனுக்கு எவ்வித வியாதியேற்பட்டாலும் எவ்வித குடும்பக்கிலேசம் உண்டானாலும் இந்த வைகுண்டநாதனாய் குருவாயூரப்பனை சிலகாலம் பஜித்துவந்தால் உடனடி பலன் அடைவான். இதற்கு துல்லியமான இடம் பூதலத்திலில்லை என்பது நிச்சயம். சாதாரணமாக கோயில்களில் விக்ரகம் உண்டுபண்ணி பிராணப்பிரதிஷ்டை முதலானவை செய்து தைவத்தன்மை வருவித்து விசுவாசத்துடன் அடிபணிந்து வருகிறார்கள். ஆனால் இங்கு அவ்விதமல்ல. தூய்மை வாய்ந்த பக்தர்களுக்கு பிரத்யட்சமாகி வேண்டுவரமணித்து அனுக்ரதிப்பது இன்றும் நடந்துவரும் காட்சியாகும். ஆகையால் ஏ ஜனமேஜயமகாராஜனே! தாங்களும் அப்புனிதமான

ஆலயம் சென்று இச்சைக்கிசைந்து வரமருளும் தயாளனான குருவாயூரப்பனை மனமுருகி சேவைசெய்து வந்தால் உங்களுடைய வியாதி குணமாகி மனதிலிருக்கும் கன்மஷங்களும் அகன்றுபோம்."

அத்திரிபுத்திரரான தத்தாத்திரேய மகாமுனி இவ்விதம் கூறவே ஜனமேஜயன் அந்த தேவாலயத்தின் உற்பத்தியையும் மகிமைகளையும் விபரமாக கூறும்படி பிரார்த்தனை செய்தபொழுது முனிவர் மீண்டும் சொல்லலானார்.

"முன்காலத்தில் சுவாயம்புவமன்வந்தரம் நடந்து கொண்டிருக்கும்பொழுது நவப்பிரஜாபதிகளில் ஒருவரான சுதபஸ் என்னும் பிரஜாபதி பிருக்னி என்னும் தன் பத்தனியுடன் புத்திரலாபம் உண்டாவதற்காக பிரும்மதேவனைக்குறித்து கடுந்தவம் செய்துவந்தார். அவருடைய தபசின் மகிமையால் பிரும்மதேவன் பிரத்தியட்சமாகி "உத்தமபக்தர்களான உங்களுக்கு நான் ஒரு கிருஷ்ணவிக்ரகம் தருகிறேன். ஸ்ருஷ்டிகர்மாவில் ஏற்பட்டிருக்கும் எனக்கு கர்மபந்தம் ஏற்படாமல் இருப்பதற்காக பகவான் எனக்கு இந்த விக்ரஹத்தைத் தந்திருக்கிறார். அதை பிரளயகாலம்வரையிலும் காப்பாற்றிவரவேண்டுமென்றும் கற்பித்திருக்கிறார். அந்த விக்ரஹத்தை நான் உங்களுக்குத் தருகிறேன். நீங்கள் அதைவைத்து பூஜித்துவந்தால் உங்கள் அபீஷ்டங்களெல்லாம் நிறைவேறும்;

மங்கலமுண்டாகும்." என்றுரைத்து விக்ரஹத்தைக் கொடுத்தருளி பிரும்மதேவன் அந்தர்தானம் செய்தார்.

இருவரும் பணிவுடன் விக்ரஹத்தைப் பெற்றுக்கொண்டு இமயமலை சென்று பரிசுத்தமான இடத்தில் வைத்து பக்தியுடன் பரந்தாமனை ஆராதனை செய்துவந்தார்கள். சிலநாள் சென்றதும் பகவான் வைகுண்டநாதன் கருடாரூடராக அவர்களுக்குப் பிரத்யட்சமானார். தம்பதிகளிருவரும் பக்திபரவசராக அத்திருமேனியைக் கண்டு களித்தார்கள். மெய்மறந்து பலவாறாக ஸ்துதி செய்து அடிவணங்கி நின்றார்கள். அவர்களுடைய பக்தியால் மிகவும் பிரீதியடைந்து பகவான் "உங்கள் அபீஷ்டம் என்ன" வென்று கேட்டபொழுது, "பகவான்! நாராயணா! சரணாகதவத்ஸலா! எங்களுக்கு எல்லா கல்யாண குணங்களும் நிறைந்த பகவத்துல்லியமான தனயன் உண்டாகவேண்டும். இந்த வரம் தந்து எங்களை அனுக்கிரகிக்கவேண்டும்." என்று பிரார்த்தனை செய்தார்கள்.

இவ்விதம் அவர்கள் பிரார்த்திக்க வைகுண்டநாதன், "பக்தசிகாமணிகளே! எனக்குத் துல்லியன் நானல்லாமல் வேறு யாரும் இவ்வுலகிலில்லை. ஆகையால் நானே உங்களுக்குப் புத்திரனாக அவதாரம் செய்கிறேன். நீங்கள் மூன்றுதரம், மூன்றுவித நோக்கத்துடன் என்னிடத்தில் வரம் கேட்டதால் மும்முறை புத்திரனாகப் பிறப்பேன். அந்தந்த அவதாரங்களிலே துஷ்டர்களை ஸம்ஹரித்து

உத்தமர்களை இரட்சித்து உலதிற்கு நன்மை செய்து லோகோத்தாரகனாக பவிக்கப்போகிறேன். அப்பொழுது நீங்கள் என்னை புத்திரபாவத்துடன் பிரம்மாவத்துடனும் ஆராதித்து முக்தியடைவீர்கள். அதுவரைவில் நீங்கள் இந்த விக்ரகத்தை பூஜித்துவருங்கள். இவ்விக்ரகத்தில் என் சன்னித்தியம் எப்பொழுதும் உண்டாகும். என் அனுக்கிரகத்தினால் வரும் ஜன்மங்களிலும் இந்த விக்ரகம் உங்களுக்குக் கிடைக்கும்." என்றுரைத்து பகவான் அந்தர்த்தானமானார்.

கிருதார்த்தர்களான தம்பதிகளிருவரும் தங்கள் இருப்பிடம் சென்று அந்த திவ்யமங்கள விக்ரகத்தை வைத்து தினம் தவறாமல் பூஜை முதலியனச் செய்து வைகுண்டநாதனைப் பஜித்துவந்தார்கள். சிலகாலம் செல்லவே பிருச்னி கர்ப்பம் தரித்தாள். பிரகாசம் பூண்ட அவளது மேனி எட்டுத்திக்குகளையும் ஜொலிக்கச்செய்தது. நல்ல சுபமுகூர்த்தத்தில் ஒளிதிகழும் ஓர் புதல்வனைப் பெற்றெடுத்தாள். பெற்றோர்கள் பரமானந்தத்தில் மூழ்கினர். செல்வகுமாரனுக்கு ஜாதகர்மா முதலான வைதிகக்கிரியைகள் செய்து பிருச்னிகர்ப்பன் எனப்பெயரிட்டார்கள். தாய்தந்தையரின் மகிழ்ச்சிக்கிசைந்து வளர்ந்துவந்த அக்குமாரன் பிரம்மச்சரிய விரதம்பூண்டு பாரிடமெங்கும் ஸஞ்சாரம்செய்து தர்ம பரிபாலனம் செய்தார்.

அத்தம்பதிகள் மறுஜன்மத்தில் கசியபராகவும் அதிதியாகவும் பிறந்தனர். அக்காலத்தில் தன்

புதல்வனான இந்த்ரனுக்கு அசுரர்களால் ஏற்படும் துன்பங்களைக் கண்டு துயரமுற்ற அதிதி தன் பதியான கசியபரிடம் முறையிட்டாள். அப்பொழுது கசியபர் பூர்வஜன்மத்தில் பூஜித்து வந்ததும் தற்பொழுது தன் வசம் இருப்பதுமான கிருஷ்ணவிக்ரகத்தை சிரத்தையுடன் பூஜை செய்துவரவேண்டும், அதோடுகூட பாயோவிருதம் என்னும் விரதத்தை பன்னிரண்டுதினம் அனுஷ்டிக்கவேண்டுமென்றும் உபதேசித்தார். அவ்விதம் அதிதிதேவியும் செய்துவரவே பக்தியின் மகிமையால் கர்ப்பந்தரித்து சிரவண துவாதசியன்று ஒரு சிசுவைப் பிரசவித்தாள். இதைத்தான் வாமனாவதாரம் என்று கொண்டாடுகிறார்கள். வாமனமூர்த்தி மகாபலியிடம் சென்று மூன்றடி தலம் பிச்சை கேட்டு உலகளந்த பெருமாளாக திரிவிக்கிரமாவதாரம் எடுத்து மூன்றுலகையும் அளந்தெடுத்து இந்திரனை திரிலோகாதிபதியாக்கி மகிழச்செய்து தர்மபரிபாலனம் செய்தார்.

பிறகு கசியபரும் அதிதிதேவியும் துவாபரயுகத்தில் தேவகியும் வசுதேவருமாகப்பிறந்தார்கள். இந்த ஜன்மத்திலும் அவர்கள் பூர்வஜன்மங்களில் பூஜை செய்துவந்த விக்ரகத்தை தௌம்ய மகாமுனி கொடுக்க மகிமை வாய்ந்த அந்த திவ்வியமங்கள விக்ரகத்தை பக்தி சிரத்தையுடன் பூஜித்து வந்தார்கள். அப்பொழுதும் கருணாகரனான வைகுண்டநாதன் கிருஷ்ணன் என்ற திருநாமத்துடன் தேவகியின் புதல்வனாக அவதரித்தார். மாயையின் சக்தியால் கிருஷ்ணபரமாத்மா

கோகுலத்தில் நந்தகுமாரனாக வளர்ந்து அனேகம் அசுரர்களை ஸம்ஹாரம்செய்து காலநேமியின் அம்சமான கம்ஸனையும் வதித்தார். பிறகு குசஸ்தவி என்னும் தீவில் துவாரகாபுரியை நிர்மித்து தாய்தந்தைகளுடனும் பந்துமித்திராதிகளுடனும் வசித்து அனேகம் லீலைகள் புரிந்து அசுர அம்சமான அனேகம் அரசர்களை வதித்து பாண்டவர்மூலம் பாரதயுத்தம் நடத்தி துஷ்டர்களை ஸம்ஹரித்து சிஷ்டர்களை பரிபாலனம் செய்து தர்மத்தை எங்கும் வளரச்செய்தார். பூலோகவைகுண்டமான அந்த துவாரகையில் அற்புதமான ஒரு கோயில் நிர்மாணம் செய்து வசுதேவர் தன்வசமிருக்கும் ஆதிவிக்ரகத்தை ப்ரதிஷ்டித்து பூஜித்துவந்தார். இப்படியிருக்கையில் காலத்தின் கொடுமையால் விப்பிரசாபம்மூலம் யாதவர்கள் எல்லோரும் தமக்குத்தாமே போர்புரிந்து ஒருவர்கூட பாக்கியில்லாமல் மாண்டுபோயினர். இதுவும் பகவானுடைய இச்சையனுசரித்து நடந்ததேயன்றி வேறில்லை. இப்போரில் கலந்துகொள்ளாமல் பகவத்தியானம் செய்துகொண்டிருக்கும் பக்தோத்தமராகிய உத்தவரை அழைத்து கிருஷ்ணபரமாத்மா இவ்விதம் உரைத்தார். "மிகவும் பக்திவாய்ந்த உத்தவா! நான் இப்பொழுது தானே துவாரகையை விட்டு என் வாசஸ்தலமான வைகுண்டம் செல்கிறேன். என் அவதாரத்தின் உத்தேசம் பூர்த்தியாகிவிட்டது. நான் போனபிறகு ஏழாவதுநாள் இத்துவாரகை ஸமுத்திரத்தில் மூழ்கிவிடும். ஆகையினால் நீ இந்த தேவாலயத்திலிருக்கும் விக்ரகத்தை கலியுகத்தில்

பிறக்கும் மனிதர்களின் இரட்சைக்காக காப்பாற்றவேண்டும். கலியின் கொடுமையால் வாடும் மனிதர்களின் கலிதாபம் தீர்க்கும் தன்மை இந்த விக்ரகத்திற்கு இருக்கிறது. ஆகையினால் நீ இப்பொழுதே தேவகுருவான பிரகஸ்பதியிடம் சென்று திவ்வியமங்களமான இந்த விக்ரகத்தை புண்ணியமான பிரதேசத்தில் பிரதிஷ்டை செய்யும்படிச் சொல்லவேண்டும். பிறகு நீ இவ்விடம் விட்டு பதரிகாசிரமம் சென்று தவம்புரிந்து ஜீவிதபந்தத்தை அகற்றுவாயாக." இவ்விதம் பகவான் உரைத்தவுடன் உத்தவன் அவரிடமிருந்து மோட்சமார்க்கோபதேசம் பெற்றுக்கொண்டு விரைவுடன் தேவலோகம் சென்று பிரகஸ்பதியிடம் பகவானுடைய கட்டளையை தெருவித்தார்.

பிரகஸ்பதியும் பகவானுடைய ஆக்ஞையை நிறைவேற்றுவதற்காக துவாரகைக்கு விரைவாக வருகையில் துவாரகை ஸமுத்திரத்தில் மூழ்குமளவிலிருந்தது. அலைகளின் மிகுதியால் விக்ரகம் இருக்குமிடம் தெரியவில்லை. மிகவும் சிரமத்துடன் பார்த்தபொழுது அவ்விக்ரகம் அலைகளால் மோதப்பட்டு அங்குமிங்கும் உருண்டுகொண்டிருந்தது. ஸமுத்திரத்தின் கொடுமையால் பிம்பத்தை எடுக்க அவரால் இயலவில்லை. அப்பொழுது அவர் வருணனை தியானம் செய்துகொண்டு வருவதுவரட்டுமென்று துணிவுடன் ஸமுத்திரத்திலிறங்கினார். அத்தருணத்தில் வருணன் பிரத்தியட்சமாகி இவரை

அனுக்கிரகிக்கவே ஸமுத்திரம் சாந்தமாயிற்று. தற்பொழுது அங்கு வந்துசேர்ந்த வாயுபகவானுடைய சகாயத்தால் விக்ரகத்தை அங்கிருந்தெடுத்து இருவருமாக அதை பிரதிஷ்டிப்பதற்கு உத்தமமான இடம் தேடி அலைந்தார்கள். எங்குபார்த்தாலும் கலியின் கொடுமை தாண்டவமாடிக்கொண்டிருந்தது. தர்மம் குன்றாமல் ஸதாசாரம் பெருகிவரும் இடத்தில் பிரதிஷ்டிக்கவேண்டும் என்றல்லவோ பகவான் கட்டளையிட்டிருக்கிறார். அவ்விதமான இடம் தேடி இருவரும் அலையும்காலத்தில் தென்னைமரங்கள் அடர்ந்துவளர்ந்து பச்சைநிறமாக காட்சியளிக்கும் பிரதேசமொன்றை கண்டனர். அப்பிரதேசத்திலிறங்கி பார்த்தபொழுது நேர்மை, ஒழுக்கம் முதலான தர்மம் நிறைந்திருக்கக்கண்டு இது பகவானுடைய அவதாரமான பரசுராமரால் உண்டு பண்ணப்பட்ட கேரளமென்றறிந்தனர். அவ்விடமெல்லாம் நன்றாகப்பார்த்தபொழுது கேரளத்தின் மேற்கு எல்லையில் ஸமுத்திரக்கரையோரமாக பொய்கையொன்றிருப்பதைக் கண்டார்கள். அத்தடாகத்தில் அனேகவிதமான புஷ்பங்கள் மிதந்துகொண்டிருப்பதைப்பார்த்து அதன் காரணம் தெரிந்துகொள்வதற்காக அதனருகில் சென்றபொழுது அங்கு முக்கண்ணனான பகவான் பரமசிவன் கிரீடைபுரிந்து கொண்டிருப்பதைக்கண்டு அவரது பாதம் வணங்கி ஸ்துதி செய்து நின்றனர். அப்பொழுது காமனை எரித்த காலாந்தகனான பரமசிவன் அன்புடன் பிரகஸ்பதியை அழைத்து பின்வருமாறு கூறலானார். "நீங்கள் வருவதை ஞானதிருஷ்டியால்

தெரிந்துகொண்டு உங்கள் வருகையை எதிர்பார்த்துக்கொண்டு நானிருக்கிறேன். இந்த விக்ரகத்திற்காக நீங்கள் படும் பிரயாசை மிகவும் புகழப்பட வேண்டியதுதான். வைகுண்டநாதனுக்கும் எனக்கும் பேதம் எதுவுமில்லை. நான் அவரை பூஜிக்கிறேன். அவர் என் லிங்கத்தை பூஜிக்கிறார். நான் முன்காலத்தில் பிரசேதஸர்களுக்கு இங்கிருந்துதான் ருத்ரகீதம் பாடி ஞானோபதேசம் பண்ணினேன். அதே இந்த இடத்தில் உங்கள் கையிலிருக்கும் விக்ரகத்தை பிரதிஷ்டை செய்யுங்கள். இந்த இடம் எனக்கு ரொம்பவும் இஷ்டமானது. அம்பிகாபுரம் (மம்மியூர்) என்னும் இடத்தில் நான் தேவி பார்வதியுடன் வசித்து வருகிறேன். தர்மம் தவறாமல் ஆயுட்காலம் கழித்துவரும் பக்தர்களுக்கு இஷ்டம் சாதிப்பதற்க்கு இக்கலியுகத்தில் இதைவிட சிறந்த இடம் பூதலத்தில் இல்லை. வைகுண்டநாதனின் பிம்பத்தை ஆராதிப்பதுதான் கலிபாதை தீர சிறந்த உபாயம். ஆகையினால் இந்த திவ்ய விக்ரகத்தை இங்கு தானே பிரதிஷ்டை செய்யுங்கள். குருவும் வாயுவும் சேர்ந்து பிரதிஷ்டிப்பதினால் இதற்கு குருவாயுபுரம் என்ற பெயர் பிரசித்தமாகும். மங்களம் பெருகுக" என்று மஹாதேவன் அருள்புரிந்ததைக்கேட்டு குருவும் வாயுவும் மிகவும் சந்தோஷமடைந்தார்கள்.

சுபமான ஒரு முகூர்த்தத்தில் அவ்விருவருமாக தடாகத்தின் தென்கரையில் அந்த விக்ரகத்தை பிரதிஷ்டை செய்தார்கள். பிறகு காமதேனுவை வரவழைத்து அதன் மகிமையால் பூஜைக்கு

வேண்டுமாரு பொருட்களை சம்பாதித்து தேவகுருவானவர் பக்திசிரத்தையுடன் பூஜை செய்து வணங்கினார். பிறகு விச்வகர்மாவெனும் தேவசிற்பியை வரவழைத்து புரமொன்றை அவ்விடத்தில் நிர்மித்து ஆலயப்பணிகளையும் செய்வித்தார். குருவாயூரின் உற்பத்திசரிதம் இவ்விதமாகும்.

எந்தவிதமான வியாதியில் அகப்பட்டவனும், எவ்விதமான துன்பம் அனுபவிப்பவனும் இங்கு வந்து தேவதேவனை ஆராதனை செய்தால் உலகுவில் குணம் அடைவான். ஓ ஜனமேஜயமகாராஜனே! நீர் கவலைப்படாமல் அங்கு சென்று குருவாயூரப்பனை நிஷ்களங்கமான பக்தியுடன் சேவை செய்துவந்தால் உம் வியாதி அகலும்; சந்தேகமில்லை. அத்துடன் உமக்கு கைவல்யமும் சித்திக்கும்.”

இவ்விதம் தத்தாத்திரேய முனிவர் உபதேசம் பண்ணினதைக் கேட்டு பிரீதியடைந்த ஜனமேஜயன் முனிவரை வணங்கி பின்னும் சொல்லுகிறார்: "என் பந்துவான கிருஷ்ணபரமாத்மா என் முதியோர்களுக்கும் பந்துவாகவல்லவோ இருந்தார். கர்ப்பத்திலிருக்கும்பொழுதே அச்வத்தமாவின் அஸ்திரசக்தியால் மரிக்கும் தருவாயிலிருந்த என் தகப்பனாரை காத்தவரன்றோ. ஆகையினால் நானும் பக்தியுடன் அவரை சரணமடைந்தால் என் ஆசை நிறைவேறும். தாங்களும் கருணைபுரிந்து என்னுடன் அவ்விடத்திற்கு எழுந்தருளவேண்டும்" என்று அரசன்

ஆவலுடன் வேண்டிக்கொண்டார். முனிவரும் அதற்கிசைந்து அவருடன் புறப்பட்டு தாமதமில்லாமல் இருவரும் குருவாயூரை அடைந்தார்கள். அப்பொழுது குருவாயூரப்பனுடைய கிழக்கு சன்னதியில் இருக்கும் ஓர் அரசமரத்தை அரசனுக்கு காண்பித்து தத்தாத்திரேயர் அதன் மகிமையை இவ்விதம் சொன்னார்:

"முன் ஜென்மங்களில் செய்த புண்ணிய கர்மங்களின் பயனால் இங்கு மஞ்சுளா என்று பெயருடைய ஒரு பெண்மணி பக்தியுடன் கிருஷ்ணபரமாத்மாவை சேவித்து வந்தாள். அவளது பக்திக்குட்பட்டு பகவான்இந்த அரசமரத்தடியிலிருந்துகொண்டு அவளுடன் லீலைகள் புரிவதை சில பக்தர்கள் பார்த்துவிட்டார்கள். அப்பொழுது மஞ்சுளை பகவானுடைய லீலாகளேபரத்தில் சேர்ந்து அதிலேயே லயித்து விட்டாள். அதற்கு பின் அவளை கண்டவரும் இவ்வுலகிலில்லை. இந்த சம்பவம் நடந்ததினாலே இந்த அரசமரத்துக்கு 'மஞ்சுளாய்' என்ற பெயர் பிரசித்தமாயிற்று. இப்பொழுதும் பக்திபாவத்துடன் பார்த்தால் பாலகோபாலனை இங்கு காணலாம். பகவான் லீலைபுரியுமிடம் என்ற பாவத்துடன் பக்தர்கள் எல்லோரும் இந்த மரத்தை வணங்கி வருகிறார்கள்."

பிறகு அவ்விருவரும் தடாகம் சென்று தீர்த்தமாடி கோயிலுக்குள் பிரவேசித்து கோடி சூரியப்பிரகாசமாய் ஒளிவீசும் கிரீடபூஷிதராகி, இரு கன்னங்களிலும் பிரபை பரவும் மகரகுண்டலங்களால் அலங்கிருதராகி,

சங்கசக்ரகதாபத்மம் தரித்த நான்கு புஜங்களை உடையவராகி, பீதாம்பரம் தரித்து மனோஹரவடிவும் பூண்ட அந்த திவ்வியமங்கலமூர்த்தியை தரிசித்தார்கள்; அடிவணங்கி ஸ்தோத்திரம் செய்தார்கள்; மெய்மறந்து ஆனந்தத்தாண்டவமாடினார்கள். பிறகு அம்பிகாபுரமென்னும் மம்மியூர் சென்று தீர்த்தமாடி மம்மியூரப்பனான பரமசிவனை தரிசித்து மறுபடியும் குருவாயூரப்பனை சேவித்தார்கள்.

இவ்விதமான ஆனந்தக்களிப்பு அனுபவிக்கும்படி உபதேசம் தந்த முனிவரை ஜனமேஜயமகாராஜன் மிகவும் புகழ்ந்துகொண்டு அவர் அடிவணங்கி நின்றார். அப்பொழுது முனி அரசைப்பார்த்து இவ்விதம் உரைத்தார். "ஓ பாக்கியம் பெற்ற மன்னவா! நீர் இன்றுமுதல் ஒரு மண்டலகாலம் அதாவது நாற்பத்தெட்டு தினம் கிருஷ்ண பரமாத்மாவின் அருள் பெறுவதற்காக இங்கேயே வசிப்பீராக. பகவானை பஜிப்பதற்கான முறையை சொல்லுகிறேன் கேளும். நீர் தினமும் அவ்விதம் செய்து வரவேண்டும்.

தினமும் இரவு நான்காம்யாமத்தில் துயிலெழ வேண்டும். உடனே கிருஷ்ணஸ்மரணையுடன் நாமசங்கீர்த்தனம் செய்து புண்யமான இந்த தடாகத்தில் நீராடி கோபுரம் திறப்பதைத் காத்திருந்து நிர்மால்லியம் நீங்கும்முன் பகவானை தரிசித்து அவருக்கு முதன்முதலாக ஆகும் தைலாபிஷேகம் தரிசித்து அந்த தைலத்தை வாங்கி சிரமேற்கொண்டு பிறகு செய்யப்படும் வாகைச்சாரத்தை வாங்கி

உட்கொள்ளவேண்டும். தினம், நிர்மால்லியதரிசனம், இருமுறை அபிஷேகதரிசனம், ஐந்துமுறை பூஜைவேளைகளில் தரிசனம், மூன்று முறை பகவான் எழுந்தருளும் சீவேலி என்னும் பிரதட்சிணம் வரும்பொழுது தரிசனம், கடைசியாக திருப்புகை தரிசனம் இம்மாதிரி பன்னிரண்டு முறை தரிசனம் செய்யவேண்டும். இவ்விதம் நீர் வைகுண்டநாதனை சேவைசெய்து வந்தால் வைகுண்டநாதனின் உத்தமபக்தனான சிவபெருமான் கிருபையினால் பகவான் உமக்கு அருள்புரிவார்". முதலில் சிவபெருமான் கிருபை உண்டாகவேண்டும். அதற்காக தினமும் தவறாமல் மம்மியூர் சென்று சிவரிசனமும் செய்துவரவேண்டும். உம் துரிதம் நீங்கி பகவானுடைய கிருபாகடாக்ஷம் உண்டாகும். உம் வியாதி அகலும்; மங்களமுண்டாகும்" இவ்விதம் உபதேசித்து முனிவர் அரசனை அங்கிருத்தித் தன் ஆசிரமம் சென்றார்.

முனிவரின் உபதேசப்படி தவறாமல், அரசனும் பகவானை பக்தியுடன் பஜித்துவந்தார். இவ்விதம சிலநாட்கள் சென்றது. ஒரு நாள் அரசன் நித்திரையை செய்யும்பொழுது கனவில் பகவான் தோன்றி இவ்விதம அருள்புரிந்தார். "ஓ பக்திஷ்ரேடருன ஜனமேஜயா! நீ இந்த ஜன்மத்தில் செய்த பாபம் போவதற்காக இக்கொடும் வியாதியையை உண்டு பண்ணினேன். இந்த வியாதியின் கொடுமை என்னை நீ பஜிக்கும்படித் தூண்டியது. அதனால் உன் துரிதம் நீங்கியது. சிறந்த உன் பக்தியினால் நான் திருப்பதியடைந்தேன்" என்று சொல்லி அரசனின் உடலை மும்முறை தடவினார்.

இவ்விதம கனவு கண்டவுடன் நித்திரையை தெளிந்து அரசன் பார்த்தபொழுது தன் தேகத்தில் வியாதியின் அடையாளாம் சிறிதும் இல்லாமல் அரசகலை விளங்குவதகக் கண்டார்.

தன் ஆசை நிறைவேறவே ஜனமேஜயன் பகவானை மனமார ஸ்துதித்து ஆனந்தபரவசராய் எழுந்து நீராடி கோயில் சென்று பகவானை தரிசித்தார். பிறகு அந்தணர்களை வரவழைத்து அவர்களுக்கு அன்னதானம், வஸ்திரதானம், சுவர்ணதானம்,எல்லாம் செய்து அவர்களது ஆசிபெற்று இன்பத்துடன் ராஜதானி சென்று அங்கிருப்படியே குருவாயூரப்பனை பக்தியுடன் ஆராதனை செய்துகொண்டு வெகு காலம் ராஜ்யபரிபாளனம் செய்துவந்தார்.

2. கோயிலின் அமைப்பு

குருவாயூரப்பன் கிழக்குமுகமாக பக்தர்களுக்குக் காட்சி அளிக்கிறார். ஆகையினால் கிழக்கே நடை பிரதானமாகும். கிழக்கு நடையில் முன்னால் கோபுரம் தென்படும். அதைத்தாண்டிடணால் ஓர் பெரிய நடைப்புரை. இதை யானைப்பந்தல் என்றும் சொல்லுவார்கள். இது பலவித அலங்காரங்களினால் ரம்மியமாக அமைக்கப்பட்டிருக்கிறது. மூலஸ்தானத்திலிருந்து கிழக்குவழியாக வெளியே வந்தோமேயானால் இந்த நடைப்புரையில் வந்து சேரலாம். உள்ளேயிருந்து வெளியே வரும்பொழுது முதலாவதாக இவ்விடத்தில் காணப்படுவதுபெரியதோர் பலிபீடமாகும். இந்த

பலிபீடம் குருவிற்கும் வாயுபகவானுக்கும் அடித்தளமானதென்று சொல்லப்படுகிறதது. பலிபீடத்திற்குக்கீழே சுவர்தக் கொடிமரம் (த்வஜஸ்தம்பம்) ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறிது. இதன் நான்கு பக்கமும் வெள்ளி பூசின கம்பிகளால் வேலி கட்டப்பட்டிருக்கிறது. கொடிமரத்திற்கு முன்னிலையில் உண்டியலப்பெட்டிகளும் தீபங்களும் கோயிலின் மகத்துவத்தை வெளிப்படுத்துவதும் கண்ணைக்கவருவதும் அனேகம் தத்துவங்களை நினைவூட்டுவதுமான பல காட்சிகளும் இருக்கின்றன்.

இவைகளின் முன்னில்தான் விசேஷமான வழிபாடுகள். பிரார்த்தனைகள், அன்னப்பிராசனம். திருமணம், துலாபாரம் இவைகளெல்லாம் நடத்தப்படுகிறது. கொடிமரத்தின் இருபுறங்களிலுமாக நடைப்புரையில் வாத்தியகோஷங்களும், கேளிக்கைகளும் பஜனை கீர்த்தனங்களும் நடந்துவருகிறது.

நடைப்புரையின் மேல்பக்கங்களில் வர்ணப்படங்கள் அலங்காரமாக வைக்கப்பட்டிருக்கிறது. பரம பக்தோத்தமனான பிரஹ்லாதனை காப்பாற்றுவதற்காக பகவான் நரசிம்மாவதாரமெடுத்து இரண்ணியகசிபுவை கோரமான நகங்களால் மாறைப்பிளர்ந்து ஸம்ஹாரம் செய்வதை சித்தரிக்கும் படமொன்று எல்லாவற்றிற்கும் மத்தியில் இருக்கிறது. அதை பார்த்தால் நம்முன்னால் இரண்ணியகசிபுவின் வதம் நடப்பதாகத்தோன்றும். முன்காலத்தில் வாரியர்குலத்தில் பிறந்த ஒரு பெரிய

பக்தன் இப்படத்தை சமர்ப்பித்தாரென்று சொல்லப்படுகிறது. அது அப்பொழுது ரொம்பவும் பழசாகிப்போயிருப்பதினால் அதைப்போல வேறொன்று இப்பொழுது இந்த ஊரில் வசித்துவருபவரான ஸ்ரீ ஸ்ரீனிவாசய்யர் அவர்களால் சித்திரிக்கப்பட்டிருக்கிறது. இப்படத்தின் இருபுறங்களிலும் புராண கதைகளை நினைவூட்டும் அனேக படங்கள் வரிசையாக வைக்கப்பட்டிருக்கிறது. "குருவாயூர் பத்மநாபன்" என்று பிரசித்திபெற்றதும் புத்திசக்தி வாய்ந்ததும் முன்காலத்திலிருந்ததுமான இக்கோயில் யானையின் ஒரு படமும், ஜீவகலை விளங்கும்படி சித்தரித்து வைத்திருக்கிறார்கள். இதைத்தொட்டு பக்தசிரேஷ்டரும் பக்திமார்க்கம் உபதேசம் செய்து மனிதரை பரவசமாக்கும் தந்மை வாய்ந்தவருமான கூடலூர்மனை குஞ்ஞிக்காவுநம்பூதிரிப்பாடு அவர்களுடையவும் அவரைப்போலவே பிரசித்தி பெற்றவரும் சமீபகாலத்தில் வாழ்ந்திருந்தவருமான வாழக்குன்னம் வாசுதேவன் நம்பூதிரிப்பாடு அவர்களுடையவும் படங்களைப் பார்த்தால் யாரும் 'கிருஷ்ணா, நாராயணா' என்று தன்னை மறந்து ஒலமிடுவார்கள். அஹிம்ஸா சித்தாந்தத்தை நிலைநாட்டியவரும் சாந்தியும் சமாதானமும் கைக்கொண்டவரும். ஆயுதம் தொடாமல் போர்புரிந்தவரும், ராஷ்டிரபிதாவுமான மகாத்மா காந்திமகானுடைய படமும் எங்கும் சாந்திநிலவும் நோக்கத்துடன் இங்கு ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இந்த நடைப்புரையையொட்டி நிற்கிறது கிழக்கே கோபுரம்.

இருபக்கங்களிலும் இரு மேடைகள் இருக்கிறது. இதில் ஒருபகுதி, கோயில் சூப்பிரண்டாபீசும் மற்றொன்று கோயிலில் காவல்புரியும் காவலாளிகள் இருக்குமிடமுமாகும். கோயிலில் நடத்தப்படும் எல்லா காரியங்களுடைய பொறுப்பும் சூப்பிரண்டைச் சேர்ந்தது. கோபுரம் கடந்து கிழக்கே சென்றால் கோபுரமுற்றம் தென்படும். இவ்விடத்தில் சேற்றூர் ஸர். சங்கரன்நாயரவர்களுடைய உபயமான மிகப்பெரிய தீபஸ் தம்பம் நாட்டப்பட்டிருக்றது. தீபஸ்தம்பத்திற்கு கிழக்குபாகமெல்லாம் ஜனங்கள் வசிக்கும் கட்டிடங்கள். கிழக்கே கோடியில் தேவஸ்தானம் வகையான சத்திரம் கட்டப்பட்டிருக்கிறது. இந்த பிரதேசங்களை யெல்லாம் கிழக்கே நடையென்று சொல்லிவருகிறார்கள். கோபுரம் கடந்து சூப்பிரண்டாபீசுக்கும் தெற்க்குபாகத்தில் ஓர் ஆராய்ச்சிமணி கட்டப்பட்டிருக்கிறது. காவலாளிகள் சமயம் தரிவிப்பதற்காக அதது மணிக்கு சரியாக மணியடிப்பார்கள். நடைப்புரைக்கும் உட்புறம் இருக்கிறது விளக்குமாடம். வாதில்மாடம் வழியாக உட்புறம் செல்லும் பொழுது பக்கத்தில் காணப்படுமிடத்திற்கு அறுத்துகெட்டிப்படி என்று பெயர். இங்கிருந்துகொண்டு தான் மேப்பத்தூர் நாராயணபட்டதிரி "நாராயணீயம்" இயற்றினார் என்று கூறப்படுகிறது.

நடப்புரையின் தென்கிழக்கு மூலையில் பிரத்தியேகமாக காணப்படும் இடத்திர்க்கு கூத்தம்பலம் என்று பெயர். இங்கே அனேகம் சிற்பவேலைகள் அமைந்த சிலாரூபங்களும், சித்திரங்களும்

இருக்கின்றன. இந்த இடம் உற்சவம் முதலான காலங்களில் சாக்கியார் கூத்து நடத்துவதர்காக நிர்மிக்கப்பட்டது. சாக்கியார் என்னும் வம்சத்தில் பிறந்தவர்கள் பாரதம், ராமாயணம் முதலான புராணங்களிலிருக்கும் கதைகளை நகைச்சுவையுடன் நடத்தப்படும் கதாகாலக்ஷேபத்திற்கு சாக்கியார்கூத்து என்று பெயர். இந்த கூத்து நடக்காதகாலங்களில் பாகவத ஸப்தாஹ பாராயணம், பாகவதம் வாசித்து அர்த்தம் சொல்லுதல், நாமஜபம் முதலியவை இங்கு செய்து வருவார்கள். தினமும் சாயங்காலம் தீபாராதனையானவுடன் பக்தர்கள் எல்லோரும் சேர்ந்து நாராயண நாமஜபம் செய்து வருகிறார்கள். இது எல்லோருடைய மனதையும் கவர்ந்துவருகிறது.

எவ்வித கொடூர மனப்பான்மையுடையவனும் இங்கு ஒரு நொடிநேரம் இருந்தானேயானால் அவன் மனதும் கரைந்து பகவானிடத்தில் லயித்துவிடும். கூத்தம்பலத்திர்க்கு மேற்குப்பக்கம் பிரதட்சினமாகச் சென்றால் பிரதட்சிணவழியையொட்டி வடபுறமாக இருக்கும் சிறு அம்பலம் தர்மசாஸ்தா கோயில். மேற்கு முகமாக சாஸ்தாவை பிரதிஷ்டித்திருக்கிறது. இந்த தேவருக்கு செய்யப்படும் வழிபாடுகளில் முக்கியமானது தேங்காய் எறிதல்.

சாஸ்தா சன்னிதியில் தேங்காய் எறிவதர்காக ஓர் சில ட்டப்பட்டிருக்கிறது. சனிக்கிழமை முதலான விசே தினங்களில் நூறு தேங்காய் எறிந்து வழிபடும் பக்தர்கு ளும் இருக்கிறார்கள். சாஸ்தா சன்னிதிவழியாக

மேர்,ே சென்றால் தெற்குப் பிராகாரத்தையொட்டி காணப்படும் கட்டிடம் பத்தாயப்புரை. இது மேற்கு அற்றம்வரையிது லும், அங்கிருந்து வடக்கே மூலைவரையிலும், அங்கிருந்து கிழக்குமேற்காக பகவதிகோயில் வரையிலும் இணைந்திருக்கிறது.

தெற்குபாகத்தில் காணப்படும் பத்தாயப்புரையின் ஒரு பகுதியில் விலையுயர்ந்த ஆபரணங்கள் முதலானவை வைப்பதர்காக ஓர் அறையும் இரும்புபெட்டியும் இருக்கி றது. தென்மேற்கு மூலையில் இக்கோயிலில் பூஜைசெய் பவர்களில் பிரதானியான மேல்சாந்திக்கு வசதி அளிக்க ப்பட்டிருக்கிறது' மேற்கு கோபுரத்தின் தென்புறமுள்ள பாகம் கலவறை என்று வழங்கிவரும் உக்கிராணசாலை மேற்கு கோபுரத்தினுடைய வடபக்கமாகவிருக்கும் பகுதி சமையலறை. இங்கு பெரிய சமாராதனை வகையறா நட த்துவதற்கான சமையலறையை ஒட்டி கிழக்குமேற்காக ண்டிருக்கும் இரண்டு நிலையுள்ள கட்டிடம் முழுவதும் ஊட்டுபுரை. இங்கு நமஸ்காரம், அத்தாழம் முதலான ஸமாராதைனைகள் நடைபெறுகிறது. பிரதட்சிணவழி பாக வந்து மேற்கு திசை கடந்து வடபுறத்தில் கிழக்குப் பக்கம் திரும்பினால் வடக்கே நடைப்புரை என்னும் யா னபபந்தல் தென்படும். உற்சவகாலங்களில் பகவானை னைமேல் வைத்து வலம்வரும் காலங்களில் இந்த நடப ரையில் இறக்கி மண்டபப்படி சார்த்துவார்கள். அப் பாழுது பலவிதமான மேளங்களும் "தாயம்பகை" என்னும் மேளவிசேஷங்களும் இங்கே நடைபெறும். இந்தஇடத்திற்கு பிரத்தியேகமான மகிமை உண்டென்று

புராதான சரிதங்களிலிருந்து தெரியவருகிறது. அதாவது அத்வைவதமத நிலவச்செய்த ஆதிசங்கராசாரியார் ஒருசமயம் ஆகாயமார்க்கமாக இவ்விடம வரவும் அன்று குருவாயூர் ஏகாதசியாகவிருக்கவே அந்த புண்ணியதினத்தை ஒட்டி பல விசேஷங்களும் நடைபெற்றுக் கொண்டிருந்தன. ஆசாரியாருக்கு இந்த வேடிக்கையெல்லாம் வீண் செயலாகவும் கேளிக்கூத்தாகவும் தோன்றிற்று. இவையெல்லாம் மூடர்களின் செயலாக நினைத்தார். அப்பொழுது அவரது மேனி தளர்ந்து மூர்ச்சையடைந்து ஆகாயத்திலிருந்தும் குருவாயூரப்பன் சன்னதியில் குப்புற வீழ்ந்துவிட்டார். மூர்ச்சை தெளிந்து பார்க்கையில் அங்கிருப்பவையெல்லாம் விஷ்ணுமயமாக இருக்கக்கண்டு வியப்புற்றார். அப்பொழுது ஆகாயத்திலிருந்தும் தேவர்கள் பூமழை பொழிந்தார்கள். மலர்மழை பொழிந்த இடத்தை நினைவுட்டுவதர்காக இப்பந்தலின் மேற்புறையில் ஒரு பகுதி திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. மேளகோஷங்களுடன் பகவான் எழுந்தருளும் வேளைகளில் இவ்விடம் வந்தால் முன் நடந்த இந்த வித்யங்களை நினைவூட்டுவதற்காக மேளங்களை சற்று நிறுத்தி ஆசாரியரை வணங்கி புதிய பாணியில் மேளம் ஆரம்பிப்பார்கள். இக்காரணங்களினால் இந்த நடைப்புறையில் பகவான் எழுந்தருளும் சமயம் தரிசனம் செய்வது ரொம்ப விசேஷமானது என்று கருதப்பட்டுவருகிறது. இவையெல்லாம் கண்டு வியப்புற்ற ஆசாரிய சுவாமிகள் சிலநாள் இங்கேயே தங்கி குருவாயூரப்பனை பஜனம் செய்து பூஜா

கிரமங்களில் சிற்சில விசேஷங்கள் நியமித்தாரென்று முன்னோர் சொல்லும் சரிதங்களிலிருந்து தெரியவருகிறது.

கோயிலுக்கு நான்கு பக்கமுமாக இருக்கும் கட்டிடங்களும் பிரகாரமும் அரண்போல் அமைந்திருக்கிறது. இவைகளுக்கும் கோயிலுக்கும் மத்தியிலிருக்கும் பகுதி பிரதட்சிணவழி எனப்படும்.

பிரதட்சிணவழியாக வந்து த்வஜஸ்தம்பம், பலிபீடம் இவைகளை வலம் வந்து கோயிலுக்குள் பிரவேசித்தால் கற்பக்கிருகத்திற்கு நான்கு பக்கங்களிலும கற்ப்க்கிருகத்தை தொடாமல் இருக்கும் கட்டிடங்களுக்கு நாலம்பலம் என்று பெயர். நாலம்பலத்தின் தென்கிழக்கு மூலையில் மடப்பள்ளி என்று சொல்லப்படும் இடம் இருக்கிறது. இங்குதான் பகவானுக்கு நைவேத்திய பதார்த்தங்கள் பாகஞ்செய்வேண்டும். வேறு இடத்தில் பாகஞ்செய்ததை நிவேதிக்கமாட்டார்கள். இந்த இடத்தில் தினமும் கணபதி ஹோமம் செய்யப்படும். தென்மேற்கு மூலையில் கணபதிக்கோயிலும், அதற்கு எதிராக கிழக்கே ஸரஸ்வதியறையும் இருக்கிறது. நவராத்திரி உற்சவத்தின் பொழுது இந்த அறையில் ஸரஸ்வதிபூஜை நடைபெறும். ஸரஸ்வதியறைக்கும் மத்தியில கருங்கற்களால் மூடப்பட்டிருக்கும் நிலவரை ஒன்றிருக்கிறது. அதனுள் விலைமதிக்குமுடியாத ரத்தினங்களும் பொங்காசுகளும் பொன்னாபரணங்களும் ஏராளமாக

நிட்சேபிக்கப்பட்டிருக்கின்றது. அதனுள் என்னென்ன சாமான் எவ்வளவு இருக்கிறதென்று இதுவரையிலும் யாருக்கும் தெரியாது. ஸ்யமந்தக ரத்தினங்கூட இங்கிருப்பதாகச் சொல்லுகிறார்கள். மகா ஸர்ப்பங்கள் இங்கே காவல் புரிவதாக சொல்லப்படுகிறது. அதனால் இதனருகில் யாரும் போவதில்லை. சில ஆண்டுகளுக்கு முன் கோயில் அதிகாரிகள் இந்த அறையினிருக்கும் பொருள்களின் தொகை எவ்வளவுவென்று தெரிந்துகொள்வதற்காக அறையைத் திறக்க முயற்சித்தார்கள். ஆனால் எக்கராணத்தினாலோ அவர்கள் பீதியடைந்து அப்பணியிலிருந்து திரும்பிவிட்டார்கள். இப்பவும் அதிலிருப்பது யாவதென்று தெரிந்தவர்கள் யாருமில்லை.

கணபதி கோவில்யொட்டி வடபுறமாக இருக்குமிடத்தில் கீழசாந்திக்கார் என்ற நம்பூதிரிகள் பகவானுக்கு சார்த்தபடும் சந்தனம் அரைக்கிறார்கள். கீழசாந்திக்காரரல்லாதார் யாரும் இங்கு சந்தனம் அரைக்கக் கூடாது. இந்த இடத்திற்கும் வடக்குபாகத்தில் அம்பலவாசிகள் என்னும் இனத்தவர்கள் மாலைகள் கட்டும் பணிகளைச் செய்துகொண்டிருப்பார்கள். மாலை கட்டும் பணியும் அம்பலவாசிகளின் முறை அவகாசமாக கருதப்படுகிறது. இந்த இடத்திற்கு வடக்கேயிருக்கும் சுவரில் அனந்தசயனம் சித்திரிக்கப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி ஒரு வரலாறு கூறப்படுகிறது.

தினமும் நடத்தப்படும் சீவேலி என்ற ஸ்ரீபூதபலிவேளைகளில் உற்சவமூர்த்த்தியை எழுந்தருளச்செய்வது முஸ்ஸத் என்று அழைத்துவரும் வர்க்கத்தாரை சார்ந்ததாக இருந்தது. ஒருநாள் சீவேலிவேளையில் முறைக்காரனான முஸ்லது வராமலிருக்க அவரை தேடினார்கள். அப்பொழுது அவர் முன்பு மேற்பகுபாகத்திலிருந்த கதவை மூடிக்கொண்டு அங்கே இப்பொழுதிருக்கும் அனந்தசயனசித்திரம் வரைந்துகொண்டிருக்கக் கண்டார்கள். தன் நினைவின்றி சித்திரக்கலையில் ஈடுபடுத்திருந்ததால் சீவேலிவேளையை மறந்திருந்தார். மற்றவர் கூப்பிடும் சத்தமும் அவர் செவியில் விழவில்லை. ஆகையால் அன்று கீழ்சாந்திக்காரர்களில் ஒருவரை உற்சவமூர்த்தியை எடுத்துதுவரக் கட்டளையிட்டனர். அன்று முதற்கொண்டு கீழ்சாந்திக்காரரே உற்சவமூர்த்தியை எழுந்தருளச் செய்துவருகிறார்கள். அந்த கலைஞனான முஸ்ஸத்தை பிற்பாடு யாரும் கண்டவரில்லை. அவர் ஏதோ அவதாரபுருஷராக இருக்கவேண்டுமென்று சொல்லிவருகின்றனர். அனந்தசயனத்திற்கும் வடபுறமாக தீர்த்ததம், பிரசாதம் அளிக்குமிடமாகும்.

வடக்குப்பக்கமாகவும் கோவிலுக்குள் பிரவேசிப்பதற்கு வாசலிருக்கிறது. இந்த வாசலுக்கு கிழக்கு இருக்கும் அறைக்கு “நிருத்த அறை” என்று பெயர். இங்கே உலகப்பிரசித்திதபெற்ற வில்லமங்கள சுவாமிகள் வீற்றிருந்து தியானநிஷ்டை செய்துவந்தார். இவரது பக்தியின் வலிமையால் தன்னை மறந்து

நிருத்தமாடுவார். ஆகையால் இந்தயிடத்திற்கு நிருத்தம் என்று பெயர் பிரசித்தமாயிற்று. சிற்சில பொழுது திருப்புகை ஆனபிறகு ஸ்வாமியார் இவ்விடத்தில் பகவானை பிரத்யக்ஷமாக பார்த்திருக்கிறார் என்று சொல்லிவருகிறார்கள். இம்மகிமை வாய்த்த இந்த இடத்தில் பூஜைகள் எல்லாம் முடித்தபிறகு அன்றாடம் வரவுசிலவுகளை ஒலையில் எழுதி வாரியர் வாசித்து பகவானை கேட்கவைப்பார்.

நிறுத்தமாடத்திகும் கிழக்கு வடகிழக்கு மூலையில் காணப்படிடம் உற்சவகாலங்களில் அங்குரார்ப்பணம் (முளையிடுதல்) செய்வதற்காக உபயோகப்பட்டு வருகிறது. ஆகையால் இந்த அறைக்கு முளையறை என்று
பெயர். மற்ற காலங்களில் கோய்மை என்றும் ஸ்தானப்பெயருள்ள கோவிலில் நடக்கும் காரியங்களை மேற்பார்வை நடத்தும் உத்தியோகஸ்தர் உபயோகித்து வருவார்கள்.

இந்த இடத்திலிருந்தும் திரும்பினால் தென்பக்கத்தில் கோயில்கிணறு காணப்படும். அபிஷேகம் முதலாக கோவிலுக்கு அவசியமான எல்லாவற்றிற்கும் இந்த கிணற்றிலிருந்து தான் ஜலமெடுக்கவேண்டும். இது ஒருபோதும் வற்றினதில்லை. கோவில் அவசியத்திற்கு வெளியேயிருந்து ஜலங்கொண்டுவரும் வழக்கமில்லை. இந்த கிணற்றில் வருணதேவனை பிரதிஷ்டித்திருக்கிறார்கள். இதன் ஜலத்தின் சுவை வியக்கத்தக்கது. இதற்கு விசேஷப்பட்ட ஸாலகிராம

சிலைகள் ஏராளமாக கிடக்கிறதென்று சொல்கிறார்கள். சீவலேலி வேளைகளில் இந்தக்கிணற்றில் பலி தூவுவதுண்டு. பஜனத்திற்காக இங்குவந்து தாமதிக்கும் ஜனங்கள் காபி முதலானது அருந்தாமல் இந்த தீர்த்தத்தை மட்டும் பானஞ்செய்து வருகிறார்கள். காப்பி சாப்பிடாமல் சிலருக்குண்டாகும் தலைவலி முதலானவையொன்றும் அவர்களை வாட்டுவதில்லை. சில பக்தர்கள் இந்த கிணற்றிற்குள்ளிலும் காணிக்கைபணம் போடுவார்கள். நாலம்பலத்தின் கிழக்குப்பக்கமாக இருக்குமிடமெல்லாம் வாதில்மாடம் என்று சொல்லப்படுமிடமாகும்.

கர்ப்பகிருகத்தின் வெளிபுறமிருக்கும் சுவர்களில் பலவிதமான. சிற்பவேலைப்பாடுகளுடன் சித்திரங்களும் காணப்படுகின்றன. பரமசிவன் கிராதமூர்த்தியாக வந்து அர்ஜுனனுக்கு பாசுபதாஸ்திரம் கொடுப்பதும், ராமாபிரான் சீதாதேவிக்கு மாலையிட்டு அயோத்திக்கு திரும்பிவரும்பொழுது பரசுராமரிடமிருந்து வைஷ்ணவ சக்தியைப் திரும்ப பெறுமிடமும், கோகுலத்தில் பகவான் பாலகோபாலன் கோபர்களுடனும், கோபிகளுடனும், சேர்ந்து செய்யும் லீலைகளின் சித்திரங்களும் மதுரையிலிருந்து வசதேவன் பகவானை கோகுலத்திற்கு
கொண்டுசெல்லும் காட்சியும், இன்னும் பாகவதத்தில் வர்ணித்திருக்கும் அநேக லீலைகளும் நான்கு பக்கங்களிலும் சித்திரித்திருக்கிறார்கள்.

தெற்குப்பக்கத்தில் சித்தரித்திருக்கும் மோகினி அவதாரமும், மேற்குப்பக்கத்திலிருக்கும் பீஷ்மரின் சரசயனமும், குவலயாபீடம் என்னும் மத்தகஜத்தின் மஸ்தகத்தில் கால் ஊன்றி அதன் கொம்பைப்பறிக்கும் சித்திரமும் ரொம்பவும் வியக்கத்தக்கவை.

இக்கோவிலை கட்டினது தேவசிற்பியான விசுவகர்மாதான் என்பதில் எள்ளளவேனும் ஐயமில்லை. ஏனென்றால் சன்னதிக்கு எதிராக பலிபீடம், துவஜஸ்தம்பம், அதிக விசாலமில்லாத வாசக்கதவுகள் இவையெல்லாமிருந்தும் எவ்வளவு தூரத்திலிருந்தும் பார்த்தாலும் பகவானை தரிசிக்கலாம். இவையொன்றும் பகவானை மறைப்பதில்லை. வருடத்தில் இருமுறை சூரியபகவானுடைய செங்கதிர்கள் பகவானுடைய பாதங்களில் படுகிறது. வெளியே எவ்வளவு கட்டிடங்கள், மரங்கள், இருக்கின்றன. இவையொன்றும் தடங்கலாவதில்லை. இவ்விதம் ஒரு கோயில், மனிதனால் நிர்மாணிக்கவே முடியாது.

கோயிலுக்கு வடபுறமாக விசாலமானதோர் தடகாகமிருக்கிறது. முன்காலத்தில் பிரசேதஸ் தவம் புரிந்த தடாகத்தின் ஒரு பகுதி அது. முன்னொரு காலத்தில் இந்த தடாகம் இங்கிருந்து சில நாழிகை தூரவிருக்கும் சாட்டுக்குலமென்கிற "இடம்பரையிலும் பரந்திருந்ததாகவும், காலப்போக்கில் பல மாறுதல்கள் ஏற்பட்டு இப்பொழுது காணப்படும் விதமாகப் பரிணமித்ததென்றும் கருதப்படுகிறது. உற்சவத்தின்

பத்தாவது தினம் பகவானை இந்த தடகாத்தில் ஸ்நானம் செய்விப்பதுண்டு. இதற்கு “ஆறாட்டு” என்று பெயர். ஆகையினால் இதை புண்ணியதீர்த்தமாக கொண்டாடி வருகிறார்கள். இந்த தடாகத்தின் கரையில் ஒரு அம்மன் கோவில் இருக்கிறது. இதில் பிரதிஷ்டை செய்திருக்கும் தேவியை தரிசனம் செய்த பிறகுதான் கோவிலுக்குள் பிரவேசித்து பகவானை தரிசனம் செய்யவேண்டும். இம்முறையை எல்லோரும் அனுசரித்து வருகிறார்கள்.

3. பூஜைகளின் கிரமங்கள்

இரவு மூன்றாம்யாமம் முடிந்ததும் மூன்று மணிக்கு சரியாக நாதஸ்வரம் வாசித்து, சங்கு ஊதி குருவாயுராப்பபனை பள்ளியுணரச்செய்வது அன்றாடம செய்வதுவரும் முதலாவது சேவை. இந்த வேளையில் மேல்சாந்தியென்பவர் எழுந்து ஸ்நானம் முதலான நித்தியகர்மங்களை முடித்துக்கொண்டு மூன்றரை மணிக்குள்ளாக சன்னதியை திறந்துவைப்பார். அப்பொழுது பக்தர்கள் நீராடி நிர்மாலிய தரிசனத்திற்காக காத்திருப்பார்கள். நடைதிறக்கும் சமயம் பக்தர்கள் செய்யும் நாமஸங்கீர்த்தனங்களின் ஓசையும், பலருமாகச்செர்ந்து ஏககாலத்தில் அடிக்கும் மணியோசையும், பகவானது பிரபையும் எல்லாமாகச்சேர்ந்து புல்லரிக்கச் செய்யும். எல்லோரும் தன்னை மறந்து "ஹரே! நாராயணா! குருவாயூரப்பா!" என்று ஒலமிடுவார்கள். நிர்மாலிய தரிசனம் ரொம்ப விசேஷமானது. முன்தினம் அணிவித்திருந்த

சந்தனக்காப்பு, ஆடைஆபரணங்கள்' மாலைகள் இவைகளை மாற்றுமுன் தரிசனம் செய்வதற்கு 'நிர்மாலிய தரிசனம்' என்று பெயர். சன்னதியிலிருக்கும் நெய்விளக்குக்கு இங்கு ஆதிகாலம் முதற்கொண்டு இருந்துவருகிறது. இந்த தீபதரிசனமே எல்லாம் பாபங்களையும் அகற்றும். பகவானுடைய சான்னித்தியமும் சேர்ந்தால் சொல்லவும் வேண்டுமா? பிறகு மேல்சாந்தி, முன்தினம் அணிவித்திருந்த திருவாபரணங்களையெல்லாம்
அகற்றுவார். அப்பொழுது 'விசுவரூபதரிசனம்' செய்யவேண்டும். அதன் பிறகு தைலாபிஷேகம் நடக்கும். இதற்கென்று பிரத்யேகமாக எள் ஆட்டின எண்ணை தயார் செய்திருக்கிறார்கள். எண்ணை ஆடின பிறகு திருமேனியிலிருக்கும் மெழுக்கைத் தேய்த்து நீக்கம் செய்வார். இதற்கு 'வாகைச்சார்த்து' என்று பெயர். பிறகு எம்பெருமானுக்கு புருஷசூக்தம் சொல்லி சங்காபிஷேகம் நடக்கும். கடைசியில் ஸ்வர்ணகலசத்தில் ஏந்தின சுத்தஜலத்தால் பூர்ணாபிஷேகம் செய்வார். இதற்கு மத்தியில் யாராவது பன்னீரோ, இளநீரோ கொண்டுவந்தால் அதையும் அபிஷேகம் செய்யவைக்கலாம். இந்த அபிஷேகம் செய்யும் பொழுது கீழே விழும் தீர்த்தத்தை அருந்துவதும் சிரமேற்கொள்வதும் திராத நோயை தீர்த்ததுவைக்கும் திவ்விய ஔஷதமாகும். அபிஷேகம் முடிந்தவுடன் மலர் (நெற்பொரி) கதலிப்பழம் சர்க்கரை இவையெல்லாம் சேர்த்த்து நைவேத்தியம் நடைபெறுகிறது. நைவேத்தியத்திற்கு முன்பு பசியால் வாடும் குழந்தையைப்போல் காட்சியளிக்கும்

பாலகோபாலமூர்த்தி நைவேத்தியம் ஆனவுடன் பசி தீர்ந்து மந்தஹாஸத்துடன் விளங்கும் உண்ணிக்கிருஷ்ணனாக தோற்றமளிப்பார். பிறகு உஷப்பூஜையின் நைவேத்தியமும் பூஜையும் நடைபெறும். அப்பொழுது நெய்ப்பாயசமும் அன்னமும் பிரதான நைவேத்தியம். இந்த நைவேத்தியம் முடிந்து நடைதிறக்கும்பொழுது திருமுடியில் மயில்பீலி அணிந்து, நெற்றியில் திலகமிட்டு, இடையில் பொன் அரைஞாண் அணிந்து, கையில் ஓடக்குழல் ஏந்தி, மஞ்சள் பட்டுடுத்து கிருபகடாக்ஷம் பொழியும் குருவாயூரப்பனுடைய தரிசனம் நம் கண்முன்னிலிருந்து அகலவே அகலாது. இவைஎல்லாம் 6 மணிக்குள்ளாக நடைபெறும் காட்சிகள்.

பிறகு மேல்சாந்தி சந்தியாவந்தனம் முதலானதை முடித்துக்கொண்டு, கணபதிஹோமமும், உடுப்புபூஜையின் அங்கமான பிரசன்னபூஜையும் செய்வார். இந்த பிரசன்னபூஜை அரைமணிநேரம் நடக்கும். பிரசன்னபூஜைக்கு நடையடைத்தால் வெளியில் இடக்கை என்னும் ஒருதர வாத்தியமும், பக்த கவியான ஜெயதேவரின் அஷ்டபதிகானமும் சேர்ந்து நடைபெறும். கொடிமரத்தின் பக்கத்தில் தவிலுடன் நாதஸ்வரமும் வாசிப்பார்கள். இந்தமுறை நான்கு பிரசன்ன பூஜைகளுக்கும் உண்டு. உச்ச பூஜையின் பொழுது செண்டை, மத்தளம், கொம்பு, குழல் இவைகளும் அதிகப்படியாக இருக்கும். பூஜை முடிந்து நடை திறந்தால் மேல்சாந்தி சங்குதீர்த்தம் தெளித்து

பக்தர்களையும் பரிசுத்தமாக்குவார். பிறகு காலையில் நடத்தப்படும் சீவேலி. இதுவும் உஷப்பூஜையின் அங்கமாகும். இப்பொழுது பரிவார தேவதைகளுக்கு அன்னத்தால் பலியிடுவது பிரதானம். இந்த வேளையில் உற்சவ மூர்த்தியை யானைமீது எழுந்தருளச்செய்து மேளகோஷங்களுடன் வெளியே பிரதட்சிணவழியாக வந்து மூன்று தரம் பிரதட்சிணம் செய்வார்கள். இத்துடன் காலையில் நடத்தப்படும் பூஜைகள் முடிவடைகிறது.

பிறகு எட்டுமணியாகும் பொழுது இந்த அலங்காரங்களையெல்லாம் நீக்கஞ்செய்து பால் அபிஷேகம் செய்வார்கள். அத்துடன் வேதம் கற்றோர்களான “ஓதிக்கன்” என்று அழைக்கப்படும் நம்பூதிரிகள் ஜபஞ்செய்து ஒன்பது கலசத்திலிருக்கும் தீர்த்தத்தை பகவானுக்கு அபிஷேகஞ்செய்வார். இதற்கு நவகம் என்று பெயர். நவகபிஷேகம் முடிந்தால் பந்தீரடி பூஜை. இந்த அபிஷேகமும் பூஜையும் ஓதிக்கன்மார்தான் செய்வார்கள். மேல்சாந்தி செய்வதில்லை. அன்றாடம் நடைபெறும் நான்கு பிரதான பூஜைகளில் இது ஒன்றாகும். மற்ற மூன்று பூஜைகளும் மேல்சாந்தி நடத்துவார். அவருக்கு அசௌகரியம் ஏற்பட்டால் ஓதிக்கன்மாரைக்கொண்டு நடத்திவைப்பார். பொறுப்பு மேல்சாந்தியைச் சேர்ந்தது. பந்தீரடிபூஜைக்கு சீவேலியில்லை. மற்ற மூன்றுக்கும் உண்டு. நான்கு வேளையும் பிரசன்ன பூஜையுமுண்டு. பந்தீரடிபூஜையை பத்துமணிக்குள்ளாக

முடித்துக்கொள்வார்கள். அன்னமும், சர்க்கரைப்பாயசமும் பிரதான நைவேத்தியம்.

பன்னிரண்டுமணிக்குள்ளாக உச்சபூஜை என்னும் மத்தியானகாலபூஜை நடைபெறும். அன்னமும், பால்பாயசமும் பிரதான நைவேத்தியம். வெண்ணை, திருமதுரம் இவையும் அப்போதுதான் நைவேத்தியம் செய்வார். விசேஷமாக வெள்ளியுருளியில் அன்னம் படைத்து வெள்ளிக்கிண்ணங்களில் மோர்க்குழம்பு, எரிசேரி, பழப்பிரதமன், தயிர் இவையும் சேர்த்து நைவேத்தியம் பண்ணப்படும். அப்பொழுது செய்யப்படும் நைவேத்தியத்திற்கு மத்தியில் அக்னிஹோமமும், பிராம்மணபோஜனமும் மூன்று தடவை பிராணாகுதியும் பிரத்தியேகமானது. மற்றவேளைகளில் அக்னிஹோமமும் பலியும்தான் உண்டு. ஐந்துமுகமாக நைவேத்தியம் செய்யப்படுவதால் இதற்கு பஞ்சமுக நைவேத்தியமென்று பெயர். நைவேத்தியமானபிறகு பிரசன்னபூஜை. அது நடக்கும்பொழுது வாதில்மாடத்தில் பிராம்மணபோஜனம் நடந்துகொண்டிருக்கும். ஒருமணிக்கு முன்னதாக பூஜையை முடித்துக்கொண்டு நடையை அடைத்துவிடுவார்கள்.

மாலை ஐந்துமணிக்கு நடை திறந்து மத்தியான பூஜையின் அங்கமான சீவேலியை முடித்துக்கொண்டு அஸ்தமனப்பொழுதில் பகவானுக்கு தீபாராதனை செய்வார்கள். இந்தக் கோவிலில் தீபாராதனை

இப்பொழுது மட்டும்தான் நடக்கும். சந்தனக்காப்பு சார்த்தி மகரகுண்டல, வலய, கடக, கிரீடாதிகளான ஆபரணங்களால் அலங்கரித்து தெச்சிமாலை, துளசிமாலை முதலான மாலைகள் அணிந்து கம்பீரமாகத் தோற்றமளிக்கும் குருவாயூரப்பனை இப்பொழுது பார்க்க இரு கண்கள் அல்ல, பதினாயிரம் கண்கள் இருந்தாலும் போதாது. இந்த வைபவத்தை பார்க்க பதினாயிரம் கண்கள் காத்திருக்கும். வைகுண்டநாதன் பிரத்தியக்ஷமாக வந்தார்போல் பிரமை ஏற்பட்டு தன் நினைவற்று எல்லோரும் கைகூப்பி நிற்பார்கள். நம் கண்களுக்கு புலப்படாமல் முப்பத்துமுக்கோடி தேவர்களும் இந்த அந்திப்பொழுதில் இங்கு வந்து தேவதேவனை வணங்குகிறார்கள் என்று சரித்திரம் கூறுகிறது. இரவு எட்டு மணியானவுடன் அத்தாழபூஜை என்று சொல்லிவரும் அர்த்தயாமபூஜை ஆரம்பமாகும். இப்பொழுது செய்யும் நைவேத்தியங்களில் பிரதானமானது நெய்யப்பம், இலையடை, பாலடைப்பிரதமன் முதலானவைகள். நான்கு வேளைகளிலும் அன்னம் நைவேத்தியம் செய்வார்கள். பிரசன்னபூஜை முடிந்தால் அத்தாழசீவேலி. சீவேலியை முடித்துக்கொண்டு பகவானை உள்ளே எழுந்தருளச்செய்து திருப்புகை காட்டுவார்கள். திருப்புகை என்பது பகவானுக்கு தூபம் காட்டுதலாகும். பூதப்பிரேதப்பிசாசுகளின் பாதையொழிய இந்தப்புகை ஏற்பது சிலாக்கியமாக கருதப்படுகிறது. திருப்புகை ஆனவுடன் நடையைச் சாத்தி மேல்சாந்தி முதலான பேர்கள் வெளியே வந்துவிடுவார்கள். பிறகு நிர்த்தம்

என்னுமிடத்தில் வைத்து வாரியர் அன்றாடம் வரவுசிலவு கணக்கை ஓலையில் எழுதி வாசிப்பார். இதற்கு 'திருத்தோலை வாசித்தல்' என்று பெயர். இப்பொழுது வாதில்மாடத்தில் பிராம்மணபோஜனம் நடைபெறும். இந்தக் கோவிலில் அன்றாடம் நடந்துவரும் பூஜையின் கிரமம் இவ்விதமாகும்.

அன்றாடம் சீவேலி நடக்கும்பொழுது பரிவாரதேவதைகளுக்கு அன்னத்தால் பலிகொடுப்பதுண்டு. கிரமப்படி பலிகொடுத்து வரும்பொழுது கோவில் கிணற்றிலும் பலிபோடுகிறார்கள். பிரகஸ்பதி, ஸமுத்திரத்திலிருந்த விக்ரகத்தை எடுக்கும்பொழுது வருணபகவானை திருப்திப்படுத்துதற்காக வருணனைப் பூஜித்ததை நினைவில் வைத்துக்கொண்டு இந்தக் கிணற்றில் வருணனை ஆவாஹித்து பூஜை செய்துவருகிறார்கள் என்று கூறப்படுகிறது. இவ்விதமே வெளியில் பலியிடும்பொழுதும் வாயுகோணான வடமேற்கு திசையில் வைத்து வாயுவிற்கும் பிரகஸ்பதிக்கும் விசேஷமாக பலி செய்துவரப்படுகிறது.

நிர்மால்ய தரிசனமும், நான்கு பிரசன்னபூஜைக்கும் தரிசனமும்செய்து, சீவேலியின்பொழுது பிரதக்ஷிணம் வைத்து, தீபாராதனை தரிசித்து, திருப்புகை தரிசித்து, எப்பொழுதும் நாமஸங்கீர்த்தனம் பண்ணி, பாகவதம் முதலான பகவத்கதை வாசித்து, மற்றவர் வாசிப்பதை கேட்டு, பகவானுக்கு நைவேத்தியம் செய்த அன்னம் புஜித்து, சக்திக்கேத்தவாறு வழிபாடு செலுத்தி பக்தர்கள்

இங்கே பகவானை பஜித்துவருகிறார்கள். பாகவதம் வாசிப்பதும் கேட்பதும் முக்கியம். எப்பொழுதும் பாகவதம் வாசிப்பது இங்கல்லாமல் வேறெங்கும் காண்பதரிது. குஞ்ஞிக்காவு நம்பூதிரி, வாழக்குன்னம் வாஸுதேவன் நம்பூதிரி முதலான பக்தச்சிரேஷ்டர்கள் இம்முறையை இங்கு பரவச்செய்தனர். குஞ்ஞிக்காவு நம்பூதிரி தன் ஆயுட்காலம் முழுதும் பாகவதபாராயணம் செய்துவந்தார். அவரது பாகவதப் பிரசங்கம் கேட்காதவர் அந்தக்காலத்தில் யாருமில்லை. அவரது படமொன்று இங்கே வைக்கப்பட்டிருக்கிறது. அவருடைய வகையாக ஆண்டில் ஒருதினம் நமஸ்காரமென்னும் வழிபாடு இன்றும் நடந்துவருகிறது. அதன் செலவிற்காக அவர் தானே தேவஸ்தானத்தில் பணம் செலுத்தியிருக்கிறார். அதன் ஆதாயத்திலிருந்தே இந்த வழிபாடு நடந்துவருகிறது. பிரேதபாதையை ஒழிவதற்கும், கதிவராத பிதுர்க்களுக்கு கதி கிடைக்கவும், ரோகசாந்திக்காகவும், மனிதனின் ஒவ்வொரு அபீஷ்டம் நிறைவேறவும், பாகவதம் ஸப்தாஹபாராயணம் நடத்துவது சிலாக்கியமானது. இவ்விதமே பக்தியை வளர்த்தும் கிரந்தங்களும் பாராயணம் செய்யலாம். வேதபாராயணம் செய்யலாம். வேதபாராயணம் நடத்துவதும் உண்டு. கலியுகத்தில் பக்திதான் முக்கியம். அதைப்பெற முயற்சிக்கவேண்டும். 'நாராயணீயம்' என்றொரு கிரந்தம் இருக்கிறது. அதை இயற்றியவர், மேப்பத்தூர் நாராயண பட்டதிரி என்னும் பெரிய பக்தனும், பண்டிதருமான ஒரு மகான். அவருடைய வாதரோகம் அகல குருவாயூரப்பனை

வேண்டிக்கொண்டு அதை இயற்றினார். இக்கிருதி முடிவடைந்ததும், அவர் வியாதி அகன்றதும் ஒரே தினமாக விருந்தது. பக்தியுடன் நாராயணீயம் பாராயணம் செய்தால் எந்த வியாதியும் கிட்டே அணுகாது. அறிவைக்காட்டிலும் பக்திதான் முக்கியம் என்று மேப்பத்தூரரிடம் பகவானே சொன்னதாக சரித்திரம் கூறுகிறது. ஒருவனுக்கு வேறெந்த குணங்கள் இருந்தாலும் பக்தியில்லையானால் மற்றவையெல்லாம் வியர்த்தம். வேறெந்த யோக்கியதை இல்லாமலும் போனாலும் பக்தியிருந்தால் அதனாலேயே முக்திபெறலாம். நாராயணீயத்தில், பாகவதத்திலிருக்கும் எல்லா விஷயங்களும் அடங்கியிருக்கிறது. இதை பாராயணம் செய்தால் பாகவதபாராயணம் செய்தபலன் கிடைக்கும். ஆகையினாலே பக்தியுடன் இந்த பாராயணம் செய்துவந்தால் எல்லா துன்பங்களும் நீங்கி எல்லா அபீஷ்டங்களும் நிறைவேறுமென்பதில் சந்தேகமில்லை.

4. வழிபாடுகள்

பக்தர்கள் பகவானுக்காக அர்ப்பணஞ்செய்யும் பொருட்கள், காணிக்கைகள், பிரார்த்தனைகள் முதலியன வழிபாடுகள் என்று சொல்லப்படும். குருவாயூர் கோவிலிடைய கோபுரத்திலிருக்கும் சூப்பிரண்டாப்பீசு குமாஸ்தாக்களிடம் அவரவர் கோரிக்கைகளை தெரியப்படுத்தினால் அதற்கு வேண்டிய பணத்தை வாங்கி ரசீது தந்து வழிபாடு

நடத்தும் பொறுப்பை ஏற்றுக்கொள்வார்கள். வழிபாடுகாரியங்களில் குற்றங்குறைகளேதேனும் ஏற்பட்டால் சூப்பிரண்டிடம் தெரிவித்தால் உடனுக்குடன் கவனித்து வேண்டிய நடவடிக்கை எடுப்பார். இங்குவரும் விஷயந்தெரியாதவர்களிடமிருந்து ஒவ்வொன்று சொல்லி ஏமாற்ற சில பேர்வழிகளிருக்கிறார்கள். அவர்களின் வலையில் விழாமலிருக்க யாவரும் கவனிக்கவேண்டும். பக்தர்கள் செலுத்தும் எல்லா வழிபாடுகளுக்கும் பொறுப்பாளி கோயில் சூப்பிரண்டுதான். அன்னிய தேசங்களிலிருந்து வரும் பக்தர்களுக்கு இடையூறு ஒன்றும் ஏற்படாமலிருப்பதற்காக தேவஸ்தானம் அதிகாரிகள் சூப்பிரண்டு வழியாக எல்லா சௌகரியங்களையும் செய்துவருகிறார்கள். இவ்வித சௌகரியங்கள் பற்றி தேவஸ்தானங்களில் காண்பது அரிது. சூப்பிரண்டாப்பீசிலிருந்து தரும் ரசீதில் செலுத்தப்படும் பணத்தின் விபரம், பொருளின் பெயர் முதலான எல்லா விபரங்களும் தேவஸ்தான முத்திரையுடன் அச்சடித்திருக்கும். அதாவது நைவேத்தியங்கள் ஆனவுடன் கோயிலுக்குள் சென்று ரசீதை காண்பித்தால் அதில் குறிப்பிட்டிருக்கும் பொருளைப் பிரசாதமாகத் தருவார்கள். வழிபாடுகளைக்குறித்து விபரமில்லாதவர்கள் சுப்பிரண்டிகளிடம் கேட்டு எல்லா விஷயங்களையும் தெரிந்து கொள்ளலாம். வழிபாடுகளில் சிலவற்றை இங்கே விவரிப்போம்.

நமஸ்காரமும் அத்தாழமும்.

எல்லா தானங்களிலும் சிறந்தது அன்னதானம். அன்னமளிப்பவர் உயிர் அளிக்கிறார். மனிதனின் எல்லாப் பிரயத்தனங்களும் பசியாற்றுவதற்காகத்தான். மத்தியானத்திலும் இரவிலும் பகவானுக்கு நைவேத்தியம் பண்ணின அன்னத்தைக்கொண்டு சமாராதனை நடத்துவதை முறையே நமஸ்காரமென்றும் அத்தாழமென்றும் சொல்லுகிறார்கள். மத்தியானம் செய்யப்படும் ஸமாராதனைக்கு நமஸ்காரமென்றும், இரவில் செய்யப்படும் ஸமாராதனைக்கு அத்தாழமென்றும் பெயர். இதன் செலவிற்கு வேண்டிய பணத்தை தேவஸ்தானம் சுப்பிரண்டாபீஸில் செலுத்தினால் அதற்கு வேண்டிய எல்லா காரியங்களையும் ஏற்பாடு செய்வார். அன்று செய்யும் பூஜை அத்தாழமோ நமஸ்காரமோ நடத்துகிறவர்களுடைய வகையாக இருக்கும். அங்கபங்கம் ஏற்பட்டவர்களுக்கும், நாதியற்றவர்களுக்கும், பிச்சையெடுத்து நாள்கழிக்கவேண்டுமென்றிருப்பவர்களுக்கும் அன்னமளிப்பதுபோல் சிறந்த தர்மம் வேறுண்டா? கோயிலுக்குள் நமஸ்காரமோ அத்தாழமோ ஆனவுடன் அந்த ஸாதுஜனங்களுக்கும் அன்னமளிப்பார்கள். அதற்கு குறைந்தபட்சம் 50 ரூபாய் செலவு செய்யவேண்டும். 500 ரூபாயும், ஆயிரம் ரூபாயும் செலவு செய்து அத்தாழமோ நமஸ்காரமோ நடத்தும் பக்தர்கள் எத்தனையோ பேர் இருந்துவருகிறார்கள், இதற்காக மூலதனம் செலுத்தி அதன் வரவிலிருந்து சாசுவதமாக இந்த தர்மம் நடத்திவருபவருமுண்டு.

அதன் பொறுப்பை தேவஸ்தானத்தில்தானே ஒப்பித்தோ நேரிடையாகவோ நடத்தலாம்.

வெள்ளை நைவேத்தியம்

இது தினமும் காலையில் எட்டுமணிக்குள்ளாக பந்தீரடி பூஜைவேளையில் நடத்தும் நைவேத்தியம். இதற்கு அன்றாடமோ, மாதக்கணக்காகவோ சூப்பிரண்டாப்பீசில் பணம் செலுத்தி ரசீது பெறவேண்டும். அன்றாடம் பணம் செலுத்துவதானால் எட்டுமணிக்குள்ளாக செலுத்தவேண்டும். இதன் சுருக்கமான அளவு கால் நாராயம். அதாவது நாழி அரிசி நைவேத்தியம். இதன் செலவு அதாது காலங்களில் இருக்கும் அரிசிவிலையைப் பொறுத்திருக்கும். பகவானை பஜித்துவரும்பொழுது ஓட்டல்களில் அகாரஞ்செய்வது ஆசாரத்திற்கும் மனசுத்திக்கும் இசைந்ததல்ல. ஆகையால் பகவானுக்கு நைவேத்தியம் பண்ணின அன்னத்தை உண்பதுதான் சிலாக்கியம். இதற்காக இந்த வழிபாட்டை நடத்திவருகிறார்கள். சிலபேர்கள் ஸாதுஜனங்களுக்கு அளிப்பதுமுண்டு. அதையே நம்பி காலங்கழித்துவரும் எத்தனையோ குடும்பங்கள் குருவாயூரில் இருக்கின்றன. இந்த பூஜைவேளையில் நடத்தப்படும் மற்றொரு வழிபாடு சர்க்கரைபாயசம். இதற்கு சுருங்கின தொகை நான்கு அணா. எத்தனை ரூபாய்க்கு வேண்டுமானா லும் நடத்தலாம். பால்ப்பாயசம், பாலடைப்பிரதமன், இரட்டிப்பாயசம், வெண்ணை, திருமதுரம்.

இவையெல்லாரம் மத்தியானம் ஒருமணிக்குள்ளாக நடக்கும் உச்ச பூஜைக்கு நடத்தப்படும் நைவேத்தியங்கள், விக்ரகத்தை பிரதிஷ்டித்தவுடன் பிரகஸ்பதி காமதேனுவை வரவழைத்து, அதன் மகிமையால் உண்டான பாயசம் முதலானவை நைவேத்தியம் செய்து முதன்முதலாக பூஜை பண்ணினதினாலே குருவாயூரப்பனுக்கு பால்ப்பாயசம், வெண்ணை முதலானதில் பிரியமதிகம். பகவான் கோபாலனென்றும், நவநீத சோரனென்றும் பெயர்பெற்றவரன்றோ. ஆகையினால் இந்த நைவேத்தியங்கள் அதிகமாக நடந்துவருகிறது.

நைவேத்தியம்	ருக்கமான தொகை
பால்பாயாசம்	0.50/-
பாலாடை ன்	5/-
இரட்டிப்பாயசம்	0.50/-
வெண்ணை	0.25/-
திருமதுரம்	0.25/-

<u>நெய்யப்பம், இலையடை</u>

இவை இரவு ஒன்பதுமணிக்குள்ளாக நடத்திவரும் அத்தாழ பூஜைக்கு செய்யும் நைவேத்தியம். இதற்கு மத்தியானம் பன்னிரண்டுமணிக்குள்ளாக பணஞ்செலுத்தி ரசீது பெறவேண்டும்.

நைவேத்தியம்	ருக்கமான தொகை
நெய்யப்பம்	0.50/-
இலையடை	1/-

மலர் (நெற்பொரி), நெய்ப்பாயசம்.

இது பிரபாதத்தில் முதலாவதாக நடத்தப்படும் உஷப்பூஜையின்போது செய்யும் நைவேத்தியம். இதுதான் பகவானுக்கு முதலாவதாக செய்யப்படும் நைவேத்தியம். பொரியோடுகூட தேங்காய், கதளிப்பழம், சர்க்கரை இவையும் சேர்த்து நைவேத்தியம் செய்யப்படுகிறது. முதல்நாள் இரவே இதற்கு வேண்டிய கட்டணம் செலுத்தவேண்டும்.

நைவேத்தியம்	ருக்கமான தொகை
மலர்கால் நாராயமா)	0.25/-
நெய்ப் பாயசம்	0.50/-

பழம், பூரிச்சக்கரை நைவேத்தியம்.

உஷப்பூஜை, பந்தீரடிபூஜை, உச்சபூஜை, அத்தாழபூஜை இந்த நான்கு பூஜைவேளைகளிலும் இந்த

நைவேத்தியம் செய்யலாம். நிவேதிப்பதற்கான பழமும், சர்க்கரையும் நாம்தானே வாங்கி சுத்தமான பாத்திரத்திலாக்கி நைவேத்தியம் பண்ணுமிடத்தில் வைத்து, நைவேத்தியமானவுடன் எடுத்துவரலாம். தேவஸ்தானத்தில் பணம் கொடுத்தும் செய்விக்கலாம். நாம்தானே வாங்கி வருவதானால் ஒரு ரூபாய்வரையிலும் விலை பெறுமான பழம் வகையறா நைவேத்தியஞ்செய்வதற்கு ஓரணா தேவஸ்தானத்தில் செலுத்தி ரசீது வாங்க வேண்டும்.

சந்தனம் சார்த்துதல்.

இது பிரதானமாக செய்துவரும் வழிபாடுகளில் ஒன்று. இதற்கென்று பணஞ்செலுத்தி ரசீது வாங்கினால் தேவஸ்தானத்திலிருந்து சந்தனம் அரைத்து பகவானுக்குச் சார்த்துவார்கள். கோய்மை என்னும் உத்தியோகஸ்தரிடம் ரசீதை காண்பித்தால் அதற்குரிய சந்தன உருளை பிரசாதமாகத்தருவார். இதற்கு சுருங்கின கட்டணம் ஒரு ரூபாய்.

களபம் சார்த்துதல்.

பச்சைக்கற்பூரம், குங்குமப்பூ முதலான சுகந்த பதார்த்தங்கள் சேர்த்து தயார் செய்யப்படும் சந்தனம் களபமெனப்படும். இவ்விதம் தயார்செய்த சந்தனத்தை பகவானுடைய திருமுகத்தில் சார்த்துவது மிகப் பிரதானமாகக் கொண்டாடப்படுகிறது. இது நடத்துவதற்கு முதல்நாளே பணம் செலுத்தவேண்டும்.

ஒரு உருளை களபத்திற்கு ஐந்து ரூபாய் வரையிலும் செலவு ஏற்படும். இந்தக்களபத்தை ஔஷதமாகவும் உபயோகித்துவரலாம். பல உபாதைகளும் நீங்கும்.

நெய்விளக்கு வைத்தல்.

இரண்டணாவிலிருந்து சக்திக்கேத்தவாறு பணம் செலுத்தினால் பகவானுடைய சன்னிதியில் அதற்கேற்ப நெய்விளக்கு ஏற்றிவைப்பார்கள். இதற்காக நெய்யாகவும் கொடுக்கலாம். பசுவின் நெய்யாக இருக்கவேண்டும்.

நிறைமாலை.

பலவித புஷ்பங்களால் தொடுத்த பூமாலைகளால் மண்டபம் முதலான இடங்கள் அலங்காரஞ்செய்வதற்கு நிறைமாலை என்று பெயர். மாலைவேளையில் ஆராதனை நடக்கும் வேளையில் இந்த அலங்காரம் செய்வார்கள். இதற்கு 7 ரூ. 4 அணா செலுத்தவேண்டும். கூடுதல் பணம் செலுத்தினால் மாலைகளும் அதிகமாக இருக்கும்.

மாலை அணிவித்தல்.

இதற்கு முன்னதாகவே கட்டணம் செலுத்தவேண்டும். சுருங்கின தொகை இரண்டணா.

மாலை	்ருக்கமான தொகை
துளசி உருண்டமாலை	0.37/-
நொச்சிப்பூ ஈடமாலை	0.56/-

புஷ்பாஞ்சலி (அர்ச்சனை)

யார் பேருக்கு அர்ச்சனை செய்யவேண்டுமோ அவரது பெயரும், நட்சத்திரமும் சொல்லி பணமடைத்து ரசீது வாங்கவேண்டும். சாதாரணமான அர்ச்சனை, ஸஹஸ்ர நாமார்ச்சனை, ஸூக்தார்ச்சனை என்று மூன்றுதரம் அர்ச்சனைகளுண்டு. எந்த அர்ச்சனை செய்யவேண்டுமோ அதைச் சொல்லி அதற்குரிய பணம் செலுத்தவேண்டும். மேல் சாந்தியிடம் ரசீதைக் காண்பித்தால் அர்ச்சனை செய்து பிரஸாதம் அளிப்பார்.

அர்ச்சனை	்ருக்கமான தொகை
சாதாரண அர்ச்சனை	0.25/-
சூக்தார்ச்சனை	1.00/-
சஹஸ்ரநாமார்ச்சனை	3.00/-

நெய் ஜெபிப்பித்தல்

பலவிதங்களான வியாதிகள் நீங்குவதற்காகவும், புத்தி வளர்ச்சி அடைவதற்காகவும் ஜபம் பண்ணின நெய்

உட்கொள்வது வழக்கமாக இருந்துவருகிறது. கருத்தரித்தவர்கள் கர்ப்பரட்சைக்காகவும், சுகப் பிரசவத்திற்காகவும் ஜபம் செய்த நெய் உட்கொள்கிறார்கள். மேல்சாந்தியிடம் அவரவர்களுடைய கருத்தை தெரியப்படுத்தி நெய்யைக்கொடுத்தால் பகவானுடைய சன்னிதியில் வைத்து ஜபம் செய்து தருவார். எவ்வளவு நாள் ஜபம் செய்யவேண்டுமோ அது முடிந்தபின் மேல்சாந்தியிடமிருந்து நெய்யை பெற்றுக்கொண்டு அவருக்கு தட்சிணை கொடுக்கவேண்டும். இதற்கு தேவஸ்தானத்திலிருந்து ரசீது வாங்கவேண்டியதில்லை.

<u>அபிஷேகங்கள்</u>.

பால், இளநீர், பன்னீர் இவையெல்லாம் அபிஷேகம் செய்யலாம். காலையில் ஒன்பது மணித்துள்ளாக நடக்கும் ‘நவகம்’ என்ற அபிஷேகத்திற்கு முன்னதாகவே அபிஷேகத்திற்கான பொருளை சுத்தமாக சன்னிதியில் கொண்டு வைக்கவேண்டும். இதற்கு பணம் செலுத்தவேண்டியதில்லை.

<u>எண்ணை அபிஷேகம்.</u>

குருவாயூரப்பனுக்கு அபிஷேகமாடின எண்ணை எல்லா வியாதிகளுக்கும், பிரத்தியேகமாக வாதரோகத்திற்கு சித்த ஔஷதமாக கருதப்படுகிறது. எவ்வளவு சிகிச்சை

செய்தும் குணம் ஏற்படாத வாதரோகம் பிடிபட்டவர்கள் ஒரு மண்டலகாலம் (48 நாள்) இந்த எண்ணையை உட்கொண்டு நோயற்றவர்களாக வாழ்கிறார்கள். இது இப்பவும் நடந்துவரும் அனுபவம். கலப்பில்லாத நல்லெண்ணையை வாங்கி சுத்தமான பாத்திரத்திலாக்கி அத்தாழபூஜைக்கு முன்பாக கோய்மை என்னும் உத்தியோகஸ்தரிடம் கொடுத்தால் மறுதினம் காலையில் நான்குமணிக்கு முன்பாக அபிஷேகம் செய்த பிறகு கோய்மையிடமிருந்து திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். நாழி எண்ணெயை அபிஷேகம் செய்வதற்கு இரண்டு பைசா வீதம் எவ்வளவு நாழி எண்ணெய் அபிஷேகத்திற்கு கொடுக்கிறோமோ அவ்வளவு பணம் தேவஸ்தானத்தில் செலுத்தி ரசீது வாங்கவேண்டும். இந்த ரசீதை கொடுத்தால் நீங்கள் கொடுத்த பாத்திரத்துடன் அபிஷேகம் ஆடின எண்ணெயை கோய்மை என்பவர் திருப்பித்தருவார். இவ்விதம் அபிஷேகம் நடத்த சௌகரியப்படாதவர்கள், மேல்சாந்தியிடமிருந்து அபிஷேகம் ஆடின எண்ணெயை விலைகொடுத்து வாங்கிக்கொள்ளலாம்.

<u>துலாபாரம்</u>

அவரவர்களின் நிலைமைக்கேத்தவாறு அவரவர்கள் பிரார்த்தித்துக்கொண்டதை அனுசரித்து தண்ணீர்தொட்டு எந்தப்பொருளும் துலாபாரத்திற்கு உபயோகப்படுத்தலாம் பழம், இளநீர், சர்க்கரை, சேனைக்கிழங்கு, சந்தனக்கட்டை, வெண்ணை, கயிறு

முதலான வகையறாக்கள் அதிகமாக உபயோகித்துவருகிறார்கள். சொறி சிரங்கு முதலான வியாதிகள் தீர சேனைக்கிழங்கால் துலாபாரம் நடத்த பிரார்த்தனை செய்வார்கள். துலாபாரம் நடத்துவதற்கு, துலாசில் நாமிருக்கும் தட்டின் கிரயம் என்ற முறையில் ஒரு ரூபாய் வைக்கவேண்டும். மறுதட்டில் பிரார்த்தனை அனுசரித்து பொருளை வைத்து இருதட்டுகளும் சமமானால் அந்தப் பொருளின் நிறை அல்லது அளவு திடப்பட்டு அதன் கிரயத்தையும் பொருளையும் எடுத்துக்கொள்வார்கள். இதற்கு சரியான ரசீதும் தருவார்கள். பொருள் அவரவர்கள் தாமே கொண்டுவருவதானால் கிரயம் செலுத்த வேண்டியதில்லை. மாமூலான ஒரு ரூபாயும் பொருளும் தேவஸ்தானத்தை சேரும். இதற்கும் ரசீது தருவார்கள். துலாபாரத்திற்கான எந்தப் பொருளும் வேண்டுமானால் தேவஸ்தானத்திலிருந்தே தருவார்கள்.

தேவஸ்தானத்திலிருந்து நிர்ணயித்திருக்கும் விலைகொடுத்து ரசீது வாங்கவேண்டும். இந்த விலை கடை விலையைவிட கம்மியாகத்தானிருக்கும்.

சோறூணு (அன்னப்பிராசனம்)

சிறு குழந்தைகளுக்கு முதல்தவையாக அன்னம் ஊட்டும் கிரியை இது. பல பேர்கள் தங்களுக்கு குழந்தை பிறந்தால் பகவத் சன்னிதியில் வைத்து அன்னப்பிராசனம் நடத்துவதாக வேண்டிக்கொள்வதுண்டு. வைதீகக் கிரியைகளோகூட

அன்னப்பிராசனம் நடத்தவேண்டுமானால் புரோகிதர்களின் இல்லத்திற்குச் சென்றோ, அல்லது நாம் இறங்கியிருக்கும் இடத்திற்கு வரவழைத்தோ கிரியாதிகளை முடித்துக்கொண்டு வாதில்மாடத்தில் வைத்து மந்திரத்துடன் அன்னப்பிராசன முகூர்த்தம் நடத்தலாம். இவ்விதம் கிரியாதிகள் இல்லாதவர்களுக்கு கோவிலில் இதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் பிராம்மணனிடம் தெரிவித்தால் அவர் அன்னப்பிராசனத்திற்கு அவசியமான இலை, அன்னம் முதலான சாமானுடன் கொடிமரத்திற்கு கிழக்குப்புறம் பகவானுக்கு நேரிடையாக இலைபோட்டு விளக்கு வைத்து அன்னப்பிராசனம் நடத்திவைப்பார். குழந்தைக்கு தீர்த்தம் பிரசாதம் கொடுத்து அன்னம் ஊட்டவேண்டும். அந்த பிராம்மணனுக்கு ஏதாகிலும் தட்சிணை கொடுப்பதுமுண்டு. விளக்குவைப்பதற்கும் எதுவாகிலும் கொடுப்பார்கள். பந்தீரடிப்பூஜைக்குப் பிறகு சன்னதி திறந்திருக்கும் எந்த சமயத்திலும் அன்னப்ராசனம் நடத்தலாம். தேவஸ்தானத்திற்கு அன்னப்ராசனம் ஒன்றுக்கு ரூபாய் ஒன்று செலுத்தவேண்டும். இதற்கும் ரசீது தருவார்கள்.

அடிமை கிடத்துதல்.

சில பேர்கள் தங்கள் குழந்தைகளை பகவானுடையகுழந்தைகள் என்று சங்கற்பித்து நடையில் கிடத்துவார்கள். இதற்கு ‘நடைதள்ளுதல்’ என்று பெயர். இதற்கு குழந்தையை நடையில் கிடக்கவைத்து பிரார்த்தனை செ ய்து

திரும்பிவந்துவிடவேண்டும். வேறு யாரைக்கொண்டாகிலும் குழந்தையை எடுத்துவரச்சொல்லவேண்டும். அப்பொழுது குழந்தையின் கிரயம் அல்லது காப்பாற்றுவதர்கான தொகை என்ற முறையில் சக்திக்கேத்தவாறு பணம் உண்டியலில் செலுத்தவேண்டும். குழந்தையை எடுத்துவருபவர் அன்னியமனிதரானால் அவரிடமிருந்து குழந்தையை வாங்கும்பொழுது தட்சிணையாக ஏதாகிலும் கொடுக்கவேண்டும். தேவஸ்தானத்தில் பணம் கொடுத்துது ரசீது பெறவேண்டியதில்லை.

<u>தாலிகெட்டுக்கல்யாணம் (பொட்டுக்கெட்டுதல்)</u>

பகவான் முன்னிலையில்வைத்து பெண்குழந்தைகளுக்கு தாலிகெட்டுவது ஒரு சம்பிரதாயம். இதற்கு ஒரு ரூபாய் செலுத்தி ரசீது வாங்கினால் இந்த வழிபாடு நடத்தலாம். கட்டவேண்டிய தாலியை முதலில் கோய்மை என்பவரிடம் கொடுக்கவேண்டும். அவர் அதை பகவத்பாதாரவிந்தத்தில் வைத்து திருப்பித்தருவார். அவருக்கு தட்சிணை ஏதாகிலும் கொடுத்து கொடிமரத்தின் கிழக்குப்பக்கத்தின் வைத்து தீபத்தில் காசுபோட்டு அவரவர் மனிதரைக்கொண்டு தாலிகட்டச்சொல்லவேண்டும். இதன்சங்கல்பம்

பகவானே தாலிகட்டுகிறார்; அவரேதான் காயன் என்றாகும். இந்த வேளையில் நாதஸ்வரம் முதலான மேளங்கள் அவசியமிருந்தால் தேவஸ்தானத்திலிருந்தே ஏற்பாடுசெய்து தருவார்கள். அதற்கு ஏற்படும் செலவை நாம் ஏற்கவேண்டும்.

விவாஹம் (கல்யாணம்)

மந்திரபூர்வமான கல்யாணங்கள் இங்கு நடத்துவதில்லை. மாலையிட்டு, மோதிரம் கைமாற்றம் செய்யும் சுயம்பரம் என்ற முறைப்பாரமுள்ளன கல்யாணங்கள்தான் இங்கு நடந்துவருகிறது. இதற்கு 5 ரூபாய் தேவஸ்தானத்தில் செலுத்தி ரசீது வாங்கவேண்டும். மாலை, தீர்த்தம், பிரசாதம் முதலானவை கோய்மை என்பவர் தருவார்.அவருக்கு தக்ஷிணை கொடுத்து அவைகளைப் பெற்றுக்கொண்டு கொடிமரத்திற்குக் கிழக்குப்பக்கத்தில் வைத்து தம்பதிகளை மாலையிடச்செய்து இருவருமாக பகவானை பிரதட்சிணம் செய்யவேண்டும். 15 ரூபாய் செலுத்தினால் முகூர்த்தவேளையில் மேளம் வாசிப்பார்கள். 25 ரூபாய் செலுத்தினால் மேளத்துடன் அழைத்துவந்து நாமிருக்குமிடத்திற்கு கொண்டுவந்து விடுவார்கள்.

ஆள்ரூபம் சமர்ப்பித்தல்.

மரத்தினாலோ, வெள்ளியினாலோ பண்ணின பிரதிமைகளை பகவானுடைய சன்னிதியில் சமர்ப்பணம் செய்வதற்கு ஆள்ரூபமிட்டு வணங்குதல்

என்று சொல்லிவருகிறார்கள். கண், கால், கை முதலான அங்கங்களுக்கு ஏதேனும் பலஹீனம் ஏற்பட்டால் அது நிவர்த்தியாவதற்கு அந்தந்த அவயவங்களின் பிரதமைகளைச் சமர்ப்பிப்பார்கள். பலவிதமான உபாதைகளால் அவதிப்படும் மனிதர்கள் அந்தந்த உபாதி நீங்குவதற்காகத்
தன் உருவப்பிரதிமை சமர்ப்பித்து வணங்கி வருகிறார்கள். பசு, காளை முதலான பிராணிகளின் உபாதை நீங்குவதற்கு அதன் உருவங்களைச் செலுத்தின பிரதிமைகளை இடுவார்கள். சொந்தமாகவே பிரதிமை செய்வித்து சன்னதியில் சமர்ப்பிக்கலாம். அல்லாதவர் அவர்களுக்கு இஷ்டமான பணத்தை உண்டியலில் போட்டு, எந்த பிரதிமை வேண்டுமோ அதைக் கேட்டால் கோவிலுக்குள்ளிருக்கும் தேவஸ்தான வேலையாட்கள் தருவார்கள். அதை வாங்கி சன்னதியில் வைத்து பிரார்த்தனைநடத்தலாம். இந்த பிரதிமைகளெல்லாம் தேவஸ்தானத்தைச் சேர்ந்தவையாகும், இதற்கு ரசீது வாங்க வேண்டாம்.

கடுகு, குந்துமணி வாரி இறைத்தல்.

இது குழந்தைகளுக்குப் புத்தி, சுறுசுறுப்பு முதலானவை வளருவதற்காக வேண்டிக்கொண்டு செய்துவரும் ஒரு வழிபாடு. கொடிமரத்திற்கு தெற்குபக்கத்திலிருக்கும் தீபஸ்தம்பத்தினருகில் ஒரு உண்டியலும் அதன் பக்கத்தில் கடுகும் குந்துமணியும் கலந்து நிரப்பிவைத்த ஒரு பாத்திரமும் இருக்கிறது. அவரவர்களதுஇஷ்டப்படி

பணம் உண்டியலில் போட்டு பாத்திரத்திலிருந்து கடுகு, குந்துமணி இவைகளை குழந்தைகளைக் கொண்டு மூன்றுதரம் அள்ளிவிசிறச் செல்லவேண்டும். அல்லது தாமே கடுகும் குந்துமணியும் கொண்டுவந்து இந்தப் பாத்திரத்திலோ சந்நிதிலோ அள்ளிவிடலாம். இதனால் குழந்தைகளுக்குப் புத்தியும் சுறுசுறுப்பும் விருத்தியடைகிறது.

<u>பாகவதபாராயணம்</u>

பூத, பிரேத, பிசாசுகள், கதியடையாத பிரேதங்கள் இவைகளின் உபாதை ஒழிவதற்காகவும் எல்லாவிதமான அபீஷ்டங்கள் நிறைவேறுவதற்கும், பக்திவர்த்திப்பதற்கும் பாகவதபாராயணம் செய்யப்பட்டுவருகிறது. பாராயணக்கிரமங்களில் ஸப்தாஹபாராயணம் மிகச்சிறந்தது. ஏழினங்களுக்குள் பாகவதம் பூராவும் பாராயணம் செய்வதுடன் அதாதினங்களில் சுருக்கமாக கதையின் சங்கரஹத்தை பிரசங்கம் செய்து கடைசியில் அவப்ருதஸ்நானம் செய்வார்கள். பதினைந்து தினங்களில் பாராயணத்தை முடித்துக்கொள்வது மற்றொரு முறை. 40 தினங்களாக மண்டலபாராயணம் செய்பவருமுண்டு. பகவானுடைய சந்நிதானத்தில் நாள் தவறாமல் தினமும் பாகவதம் மூலம் பாராயணம் செய்பவர் பலர் இருக்கிறார்கள். தமக்குத்தாமே பாராயணம் செய்யமுடியாதவர்கள் மற்றவர்களைக்கொண்டு பாராயணம் செய்விக்கலாம். அதன் பயன்பெறுவதற்கு வாசிப்பவர்களுக்கு தக்ஷிணை கொடுக்க வேண்டும். இவ்விதம் வாசிக்கவைத்து

பாகவதபாராயணம் நடத்திவரும் பக்தர்கள் எத்தனையோ உண்டு. தேவஸ்தானத்திற்கு பணம் செலுத்த வேண்டியதில்லை. ஒருவகையாக ஸப்தாஹபாராயணம் நடந்துகொண்டிருக்கும் பொழுது அதை கேட்பதற்காக அநேகம் பக்தர்கள் சேருவார்கள். பலருக்கும் கதை கேட்கவைக்கும் புண்ணியமும் இதனால் ஏற்படுகிறது. கூத்தம்பலத்தில் வைத்து இது நடத்தப்பட்டுவருகிறது.

சுற்றுவிளக்கு.

கோவில் உள்பக்கங்கள், வெளிப்பக்கங்கள், முதலான எல்லாவிடங்களிலும் தீபங்களால் அலங்காரஞ்செய்து, அத்தாழப்பூஜை முடிந்தபிறகு பலவிதங்களான மேளங்களுடன் பகவானை யானைமீது எழுந்தருளச்செய்து, ஐந்து பிரதக்ஷிணஞ்செய்விக்கும் வைபவத்திற்கு சுற்றுவிளக்கு என்று பெயர். விளக்கு ஏற்றுவதற்கு தனி நெய் உபயோகிப்பவருமுண்டு. பொதுவாக தேங்காய் எண்ணை உபயோகித்து வருகிறார்கள். இந்த விளக்கு நடத்துவதற்கு 300 ரூபாய் தேவஸ்தானத்தில் செலுத்தினால் அவர்களின் மேற்பார்வையில் நன்றாக நடத்திவைப்பார்கள். இந்த முன்னூறு ரூபாயில் ஒரு பாகம் பூஜை, நைவேத்தியம், மாலை முதலானவைகளுக்கும் சேர்ந்துள்ளது.

உதயாஸ்தமன பூஜை.

இதுதான் எல்லா வழிபாடுகளிலும் மேலானதும் அதிகம் செலவுவருவதுமான வழிபாடு. சூரியோதயம் முதல் அஸ்தமனத்திற்குள்ளாக இருபத்தொரு பூஜைகள் நடத்துவத்தினால் இதற்கு உதயாஸ்தமன பூஜை என்று பெயர் வந்தது. இப்பொழுது இது நடத்தவேண்டுமானால் குறைந்தபட்சம் 1500 ரூபாயவரை தேவஸ்தானத்தில் செலுத்தவேண்டும். தாமே சாமான்கள் வாங்கி நடத்தவும் செய்யலாம். தேவஸ்தானத்திற்கு அடையவேண்டிய பணம் மட்டும் செலுத்தி ரசீது வாங்கவேண்டும். இதில் இங்கே நடந்துவரும் எல்லா வழிபாடுகளும் சேருகிறது.

<u>யானையிருத்தல்</u>.

சீவேலிக்கு பகவானை எழுந்தருளச்செய்வதற்காக யானையை வழிபாடாக அளிப்பார்கள். இதற்கு யானையிருத்தல் என்று பெயர். ஒரு யானையை இருத்தவேண்டுமானால் அதற்கு பிரத்தியேகமான கிரியைகள் உண்டு. அவைகளை தேவஸ்தானம் சூப்பிரண்டிடம் கேட்டு தெரிந்துகொள்ளலாம். யானையின் கிரியம்போக 1500 ரூபாயவரையும் செலவு செய்யவேண்டியதாயிருக்கும். இவ்விதம் ஒவ்வொரு தனவந்தர்களால் இருத்தப்பட்ட யானைகள் தான் இப்பொழுது இங்கிருக்கும் யானைகள்.

<u>ஸ்ரீபகவதிக்கு அழல் நைவேத்தியம்.</u>

இது பகவதிக்கு ரொம்பவும் பிரியமான நைவேத்தியம். இங்கிருக்கும் பகவதிக்கு அரிசி, தேங்காய், அவல்

இவைகளைத்தான் நைவேத்தியஞ்செய்வார்கள். அன்னம் படைத்து நைவேத்திப்பதில்லை. சுத்தமான துணியை எண்ணையில் நனைத்து அதில் அழலையேற்றி பூஜை முதலானது செய்து நைவேத்தியம் பண்ணுவார்கள். இதற்கு அனல் (அனல்) என்று பெயர். இதற்கு 8 அணா கொடுத்து ரசீது வாங்கவேண்டும். மாலை தீபாராதனை முடிந்த பிறகு அத்தாழபூஜைக்கு முந்தி இந்த நைவேத்தியம் நடக்கும். இதை தரிசனம் செய்து பிரசாதம் பெற்றுக்கொண்டு தேவியை வணங்கவேண்டும்.

பல்வகை வழிபாடுகள்

பலவிதமான ஆபரணங்கள், பட்டுவகைகள், வஸ்திரம், மணி, ரத்தினம், விளக்கு, பாத்திரம், காய்கறிகள், பசு, கன்றுக்குடி முதலான எதுவும் இங்கே பகவானுக்காக அர்ப்பணம் செய்யப்பட்டுவருகிறது. நோயின் வாயில்ப்பட்டு மரணத்தின் எல்லையில் அகப்பட்டிருக்கும் பசுமாடு முதலானவை இங்கு நடைதள்ளுவதாக வேண்டிக்கொண்டால் அவை பிழைத்துவிடுகிறது. பகவான் கோபாலனென்கிற தன் பெயரை யதார்த்தமாகச்செய்கிறார். மேலும் இந்த கோவிலில் பிரதிஷ்டித்திருக்கும் மற்று கணபதி, சாஸ்தா முதலான தெய்வங்களுக்கும் பிரத்தியேகமாக அநேகம் வழிபாடுகள் செய்வதுண்டு. பாடகம், ஓட்டம் துள்ளல், சங்கீதக்கச்சேரி, பரதநாட்டியம், ஹரிகதாகாலட்சேபம் முதலான கலாவிநோதங்களும் நடத்துவதுண்டு. பகவான் பக்தப்பிரியனாதலால் யார்

யார்வசம் என்ன இருக்கிறதோ அதைப் பெற்றுக்கொண்டு அனுக்கிரஹம் செய்கிறார். பக்தர்கள் கொடுக்கும் ஒவ்வொன்றும் அவருக்குப்பிரியம்தான். எல்லாவற்றிற்கும் உபரியாக கபடமற்ற பக்தி நிறைந்த மனமொன்றே பகவானுடைய பாதாரவிந்தத்தில் அர்ப்பணம்செய்தால் போதுமானது. மனமில்லாமல் தன் பெருமையைக் காட்டுவதற்காக எது செய்தும் பிரயோசனமில்லை. ஆகையால் பக்தியுடன் யார் பஜனைசெய்கிறார்களோ அவர்களுக்கும் பகவான் பக்ததாஸன் என்னும் தன் பெயரை மெய்யாக்குகிறார். இவ்விதம் கபடமற்ற பக்தஜனங்களை பகவான் என்றும் இருந்துக்கொண்டு இரட்சித்து அருள்புரிகிறார்.

5. <u>உற்சவதினங்கள்</u>

இந்த கோவிலில் நடந்துவரும் உற்சவம் முதலான விசேஷமான தினங்களைப்பற்றி பொதுமக்கள் தெரிந்துதுகொள்வதற்காக அவைகளையும் விவரிக்கிறோம்.

1. அக்ஷய த்ரிதியை - பலராமஜயந்தி - சித்திரை மாதம் சுக்லபக்ஷ த்ரிதியை.
2. நிறை-புத்திரி- புதிதாக நெல்கதிர் கொண்டுவரும், புதரிசி நைவேத்தியம் செய்வதும் - ஆவணிமாதத்தில் கேரளத்திலெங்கும் கொண்டாடப்படும் ஓணத்திற்கு முன்பாக சுபமுகூர்த்தம் பார்த்து நடத்தப்படுவது.
3. அஷ்டமிரோகிணி- ஸ்ரீகிருஷ்ண ஜயந்தி - ஆவணி மாதத்தில் வரும் கிருஷ்ணாஷ்டமி.

4. மண்டலகாலம்- கார்த்திகை மாதம் முதல் தேதியிலிருந்து நாற்பதுநாள்.
5. குருவாயூர் ஏகாதசி. கார்த்திகை மாதம் சுக்ல ஏகாதசி.
6. குசேலதினம்- மார்கழி மாதம் முதலாவதாக வரும் புதன் கிழமை. அன்று அவில் நைவேத்தியம் பிரதானம்.
7. தாலப்பொலி- மார்கழி மாதம் 21-ம் தேதி இங்கிருக்கும் பகவதி கோவிலில் நடத்தப்படும் விசேஷம்.
8. உற்சவம்- மாசி மாதம் பூசம் நட்சத்திரத்தில் கொடியேற்றம், பத்தாவது நாள் ஆரூட்டு.
9. கிருஷ்ணாட்டம் களி- மாசி மாதத்திலோ பங்குனி மாதத்திலோ எட்டு நாள் கிருஷ்ணாட்டம் களி நடக்கும்.
10. விஷுக்கணி பார்த்தல்- சித்திரை மாதம் முதல் தேதி அதிகாலையில் செய்யப்படும் தரிசனம்.

முற்றிற்று.
சுபம்.